26

Reg. No. M. 1482.

ஸமரஸபோதினி.

"The Samarasabodhini"

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

E. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர்.   E. Suryanarayana Aiyar B. A., B. L., *Editor*

புத்தகம் 1. | ரௌத்திரிஹ ஆடிமீ ௨௰௨ புதன்கிழமை **21 st July 1920.** தஞ்சாவூர். | பிரதி 6.

ஸமரஸ போதினி.

இஃதொரு தமிழ் வாரப்பத்திரிகை. புதன்கிழமை தோறும் தஞ்சையினின்றும் வெளிவருவது. இந்தியர்கள் பிரிட்டிஷாரைப்போல சுதந்தரமும் பூரணசுய ஆட்சியும் பெற்று உலகத்தார் கண் முன்பு சுகமாகவும் தைரியமாகவும் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் காங்கிரஸை முழுமனத்துடன் ஆதரிப்பதாகும். அரசியல், கல்வி, விவசாயம், தொழில், வியாபாரம், தொழிலாளர் இயக்கம் முதலிய விஷயங்கள் இப்பத்திரிகையில் நன்கு விவரிக்கப்படும். எளியவர்களும் இதை வாங்கிப் படிக்கவேண்டி இதன் சந்தாவைக் குறைத்து வைத்திருக்கிறோம்.

சந்தா விவரம்:—

இந்தியா, பர்மா, சிலோன்
முதலிய விடங்களுக்கு ரூ. 5—0—0
ஆறுமாதங்களுக்கு .... ரூ. 3—0—0
பினங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு ரூ. 7—0—0
ஆறுமாதங்களுக்கு .... ரூ. 4—0—0

குறைந்த விளம்பர விகிதம்:—

பத்தி 1க்கு மாதம் 1க்கு ரூ. 20—0—0
இஞ்சு 1க்கு .... ரூ. 1—0—0

For One month 4 insertions per month per column Rs. 20—0—0
Casual Advertisements @ 1—0—0 per inch.

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

விஷயதானம் :— செய்பவர்கள் நல்ல வியாசங்களை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை இவ்விடம் வந்து சேரும்படி எழுதி அனுப்பவேண்டும். எழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தனித்தனி எழுத்தாக எழுதி அனுப்பவேண்டும்.

நல்ல வியாஸங்கள் எழுதுவோருக்குத் தகுந்த ஊதியம் கொடுக்கப்படும். முழு விபரங்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

நவீனம்!   நாகரீகம்!!

ஓரியண்டல்.

சுய ஆட்சிக்குவழிகாட்டி
பட்டு அங்கவஸ்திரங்கள்.

ஒம்ரூல் சேலைகள். (காப்பிக் கலர், டீக்கலர், கோக்கோ கலர், கூங்குகலர்,)
தற்கால பாங்கான ஜமக்காளங்கள் எங்களிடம் மிக சரசமாய்க் கிடைக்கும்.

விலாசம் :— **ஓரியண்டல் வேர் ஹவுஸ்,**
அய்யங்கடை., தஞ்சாவூர்.

லண்டன் வாச்சு & கோ.,

திருவாதி, தஞ்சை ஜில்லா.



இதை ஒவ்வொருவரும் கவனியுங்கள்.

தச்கலாபம். எங்களுடைய உண்மையை ஒரே தடவை பரிசோதித்து பாருங்கள் அப்போது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். வரவழைத்து திருப்தி இல்லாவிட்டால் உடனே ரூபாயை வாபஸ் செய்து விடுகிறோம்.

விபரம் :—புதிய பாக்கெட் லீவர் வாச்சு 5 வருஷம் உத்திரவாதமும் நடத்தானவும் இந்தியன் கவர்ன்மெண்டு குண்டுக்குச் சரியான காலத்தைக் காட்டக்கூடியது.

1. புதிய பாக்கெட் லீவர் வாச்சு 5—0—0
2. ஷை மாதிரி கையில் கட்டிக் கொள்ளக்கூடியது சிலண்டர் 6—0—0
3. ஷை அசல் சொக்க வெள்ளி 8—0—0
4. ஷை மாதிரி நிக்கல் ரேடியம் டையலுள்ளது 7—8—0

இதைத்தவிர ஒமிகா, பிரிடியன், கெடியாரங்கள் விலை சரசமாய் வேண்டியவர்கள் அரை அணா ஸ்டாம்பு அனுப்பி கிரயஜாப்தா பெற்றுக்கொள்ளலாம். ஆர்டர் செய்வோர் பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டு எழுதவும்.

தேவை.

சந்தாதாரர்களைச் சேர்க்கவும் விளம்பரங்களைச் சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்,
ஸமரஸ போதினி ஆபீஸ்,
எல்லையம்மன் கோவில் தெரு,
தஞ்சாவூர்.

Kerosine Gas Stoves.
கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

கோரனஸ்ட்வ் நெ. 5. ரூ. **14-0-0.**

வஸன் கம்பெனி,
தஞ்சாவூர்.

பெரியாரின் ஜீவிய சரிதம்.

திலகர் பெருமான்.

(14-ந் தேதி போதினியின் 11-ம் பக்கத் தொடர்ச்சி)

XI. திலகரின் பொதுநல உழைப்பு.

சிறையினின்றும் விடுதலையடைந்தவுடன், திலகர் பெருமான் காவற் கொடுமை மிகுதியால் தளர்ச்சியடைந்திருந்த தம் சரீரத்தைப் பலப்படுத்தும் பொருட்டுச் சுகாதார வசதிகள் நிறைந்த சிங்காட் கோட்டையில் ஆறுமாத காலந் தங்கியிருந்தனர். அவ்வருடம் சென்னைமா நகரில் நடைபெற்ற காங்கிரஸுக்குத் திலகர் சென்றதுமன்றி இலங்கைத் தீவுமட்டுஞ் சுற்றுப்பிரயாணஞ் செய்துவந்தார். சென்னைக் காங்கிரஸில் திலகர் சக்திக்குறைவினால் பிரசங்கமொன்றுஞ் செய்யவில்லை. 1900 ம் ஆண்டு லாகூரிற் கூடிய காங்கிரஸ் சபையில், பஞ்சத்தாலும் வறுமையாலும் பீடிக்கப்பட்டு வருந்தும் இந்தியரின் பரிதாப நிலையைக் குறித்த தீர்மானத்தைத் திலகர் ஆதரித்து, அந்நிலையை மாற்றவேண்டிய மார்க்கத்தையனுசரிக்க வேண்டுமென்று மிகவும் உருக்கமாகப் பேசினார். மறு வருடம் கல்கத்தாவில் நடந்தேறிய காங்கிரஸுக்குப் போய்ச் சான்றோர்களடங்கிய அப்பெருஞ் சபையில் இந்தியாவில் கல்வியபிவிருத்தியடைய வேண்டுமென்றும் அறிவிலிகளநேகர் நமது நாட்டிலிருக்கின்றனரென்றும், ஆண் பெண் மக்களொவ்வருவருக்கும் எழுதப்படிக்கத் தெரியவேண்டுமென்றும், இதையொட்டிய சீர்திருத்தங்களை யாலோசனை செய்யுமாறு அரசாங்கக் கமிட்டியொன்று நியமிக்கப்படவேண்டுமென்றும் வற்புறுத்தலாயினர்.

திலகர் பெருமான் காங்கிரஸில் பேசுவதோடுநின்றுவிடவில்லை. இந்தியாவில் கைத்தொழில்கள் அழிந்துவிட்டனவென்று திலகர் நன்குணர்ந்தவராதலால், அக்குறையைத் தவிர்க்கவெண்ணிப் பைசா நிதிப்பண்டகசாலையொன்றைத் தாபித்தார். அதிற் பங்கெடுப்போர் மூன்று பைசாக்களுக்கு மேற்பட்ட தொகையை மூலதனமாய்க் கொடுக்கவேண்டும். இத்தொழிற்சாலையில் சுதேசிக் கண்ணாடிகளும் விளக்குகளும் விளக்கினுறைகளும் இன்றைக்குஞ் செய்யப்பட்டு வருகின்றன. அளவற்ற இந்தியத் தொழிலாளர்கள் இப்பண்டகசாலையில் வேலை செய்து பிழைத்து வருகிறார்கள். பைசா நிதித் தொழிற்சாலையின் தலைவர் திலகர்.

இஃதன்றியும் பம்பாய் மாகாணத் தொழிலாளர்களின் பரிதாப நிலையைக்கண்டு மனம்பொறாது, அவர்களின் முன்னேற்றத்திற்குரிய வழிகளைத் திலகர் அனுசரிக்கலாயினர். தொழிலாளர்கள் திலகர் பிரானைத் தந்தையெனப் பாவித்தார்கள். திலகர் பெருமான் தொழிலாளர்களை அடிக்கடி கூட்டுவித்துப் பிரசங்கங்கள் வாயிலாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் மதுபானத் தீங்குகளை நன்கெடுத்துக் காட்டிவந்தார். இத்தகைய முயற்சியின் பயனாகப் பம்பாய் மாகாண வாசிகளிற் பெரும் பான்மையோர் மதுபானத்தையறவே ஒழித்தனர்.

இக்காரியங்களுக்கிடையே, 1900 ம் ஆண்டு ரைகாட்குன்ற மீதில் சிவாஜி பண்டிகை வெகுவுன்னதமாகவும் உற்சாகத்துடனும் திலகரின் அவைத் தலைமையின் கீழ் நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் நாலா பக்கங்களினின்றும் வந்து குழுமியிருந்தனர். பிரசன்னராயிருந்தவர் யாவரும் சிவாஜி சமாதியைச் சிறப்பிக்கும்பொருட்டுத் தங்களாலியன்றளவு திரவியவுதவி புரிந்தார்கள்.

XII. ஆர்டிக் ஹோம்.

இது காலை திலகர் பெருமான் வேறொரு வேலையிலும் கவனத்தைச் செலுத்தி வந்தனர். 1892 ம் வருடம் தாம் பிரசுரித்த ஓரியனில் கண்ட விடயங்களை மேன்மேலும் ஆராய்ச்சி செய்து நித்தியமான வொரு தீர்மானத்தையடையவேண்டுமெனுமவா, திலகர் மனத்தில் நிரம்பியிருந்தது. இந்து வேதங்களின் புராதன நிலையை அறியும் பொருட்டுப் பத்து வருடங்களாகவே திலகர்பிரான் அவ்விதமுயற்சியில் தனக்கொழிவுற்ற காலத்தைக் கழித்துவந்தார். மானிட வாழ்க்கையின் பூர்வ சரித்திர சம்பந்தமாய்ப் பூகோள வுறுப்பிலக் கணத்தின் நவீன ஆராய்ச்சி முறைகளை நுட்பமாய்த் தழுவிவேதங்கள் காலத்திலிருந்த முனிவர்களின் முன்னோர்கள் உத்திர சமுத்திரத்தின் வடபாகத்தில் வசித்து வந்தனரெனுங் கோட்பாட்டைத் தக்க சாட்சியங்களின் ஆதாரவினால் நிலை நிறுத்தினார். மிகுந்த பிரயாசைப்பட்டடிந்த இவ்வாராய்ச்சியை "ஆர்டிக் ஹோம்" என்ற புத்தக ரூபமாய் உலகத்தினருக்குத் திலகர் வெளியிட்டுள்ளார்.

இப் புத்தகம் அச்சிடப்பட்டதும் வையகத்துள்ள கல்வியாளிரில் திலகரைக்கொண்டாடாதவரில்லை. எங்குப் பார்த்தாலும் திலகர் புத்தகத்தைப்பற்றிய பேச்சாகவேயிருந்தது. பாஸ்டன் சர்வகலாசாலைத் தலைவர் வாரனென்னும் பண்டிதர், சிகாகோவில் வெளிவரும் மாதாந்தப் பத்திரிகை யொன்றில் திலகர் பிரானின் திவ்விய நூலைப் பற்றிப் பின் வருமாறு வியந்தெழுதியிருக்கின்றனர்.

"இச்சிறு வியாசத்தில் திலகரின் அபிப்பிராயங்களை விவரமாய்க் கூறவியலாது. சரித்திர வாராய்ச்சி முறையைத் தழுவி இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. எவ்வித முற்கோட்பாட்டுடனும் திலகர் இதை யெழுத வாரம்பிக்கவில்லை. ஆனால் அளவற்ற சாட்சியங்கள் திலகரின் முடிவையே யாதரிக்கின்றன. இது போன்ற நுட்பமான விடயத்தை உலகத்திற்கு வெளிப்படுத்திய திலகர் பிரானின் நுண்ணியஅறிவை என்போன்றஅறிவிலிகள் வியக்கலாகுமோ? அவர் இப்புத்தகத்தால் உலகினுக்குச் செய்திருக்கும் நன்மைகள் யான் வருணிக்கற்பாலதோ? இருபது வருடங்களுக்கு முன் மனித வர்க்கத்தின் ஆதிவரலாற்றை யான் ஆராய்ச்சி செய்த பொழுது திலகர் பெருமான் இப்பொழுது வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்தையே நான் கொண்டேன், தூரதேசத்திலிருக்கும் பெருமை வாய்ந்த இப்பண்டிதரை நான் பன்முறை வணங்குவதோடு அழுத்தமானதும், ஆனந்தத்தலைத்தரக்கூடியதும், அபூர்வ சங்கதிகளடங்கியதுமான அவர் புத்தகத்தை யாவரும் வாசிக்குமாறுகேட்டுக்கொள்ளுகிறேன். வெகு நாட்களுக்கு முன் நான் வெளியிட்டுள்ள நோக்கங்களைச் சுட்டிக்காட்டித் தம் புத்தகத்தில் வரைந்திருப்பதற்காகத் திலகர் பெருமானுக்கு எந்நாளும் மறவாத நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்"

தஞ்சாவூர்
20—7—20 } ஆர். கணேசன்.

(இன்னும் வரும்.)

கிலாபத் குறிப்புகள்.

துருக்கியைப் பலவந்தப்படுத்தி, உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளும்படி செய்ய பிரஞ்சுக்காரருக்கு இஷ்டமில்லையென்றும் இங்கிலாந்து தொழிற் கட்சியாருக்கும் அவ்வாறான எண்ணம் தானிருக்கிறதென்றும் இடாலிக்கும் இஸ்லாத்துக்கு விரோதமாய்ப் போராட இஷ்டமில்லையென்றும் ஜனாப் முகம்மதலி பாரிஸ் நகரிலிருந்து தமது சகோதரர் ஜனாப் ஷவுக்கத் தலிக்கு எழுதியிருக்கிறார்.

* * *

பிரிட்டிஷார் பாலஸ்தீனத்தையும் மெஸபொடோமியாவையும் நடத்தப்பாத்தால் இந்தியா இங்கிலாந்துக்கு நிலைத்திராதென்று மிஸ்டர் லவட்பிரேஸர் 'டெயிலி மெயில்' பத்திரிகைக்கு ஒரு வியாசமெழுதி யிருக்கிறார்.

* * *

இம்மாதம் 11-ந் தேதி பம்பாயில் மத்திய கிலாபத் கமிட்டியின் கூட்டமொன்று கூடிய போது ஜூன்மீ 13-ந் தேதி வரையில் கிலாபத் நிதிக்கு மூன்று லட்சத்து, 28 ஆயிரத்து, 361 ரூபாய், 4 அணா 7 பைசா வரவு வசூலிக்கப்பட்டிருக்கிறதென்றும் இதில் ஒரு லட்சத்து 54 ஆயிரத்து 598 ரூபாய் 11 அணா 3 பைசா செலவு செய்யப்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டது.

* * *

அமிர்தசரஸ் வாசியான டாக்டர் கிச்சிலுவும் சென்னை யாகுப்ஹாஸனும் மத்திய கிலாபத் கமிட்டிக்குக் கௌரவ காரியதரிசியாய் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். மிஸ்டர் யாகுப்ஹாஸன் கௌரவ காரியதரிசிபதவிக்கு இன்னும் உறுதி செய்யப்பட்டு அங்கீகாரம் செய்யப்படவில்லை.

* * *

கிலாபத் கிளர்ச்சியின் நிமித்தம் மிஸ்டர் யாகுப்ஹாஸன் தமது காலத்தைப் பெரும்பாலும் பம்பாயில் கழிப்பரென்று தெரிகிறது.

* * *

கிலாபத் தலைவர்களைப் பற்றித் தூஷணையாக வட ஆறுகாடு ஜில்லா கலெக்டர் கூறியது கண்டிக்கத் தக்கதென்றும் கவர்ன்மெண்டார் இதை அருவருக்கவேண்டுமென்றும் சென்னை கிலாபத் கமிட்டியின் கூட்டுக்காரியதரிசி பத்திரிகைகளுக்கு ஒரு குறிப்பு எழுதியனுப்பி யிருக்கிறார்.

(11ம் பக்கம் பார்க்க.)

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாத் தொகைகளைக்காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

(ப-ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.

"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's & Truth's"

ரௌத்திரிஸு ஆடிமீ௳ கூஉ புதன்கிழமை.

21st JULY 1920.

வீண் பயம் ஏன்?

ஆங்கில அரசாட்சி ஏற்பட்ட நாள் முதற்கொண்டு நமது இந்திய தேசம் பல வழிகளில் மாறுதலடைந்து வருகின்றதென்பது யாவரும் அறிந்த விஷயம். இம்மாறுதலுக்குக் காரணம் இங்கிலீஷ் படிப்பும், ஆங்கில தேசத்தினரின் நாகரிகமும், அன்னவர்களின் அரசியல் முறையும், அவர்களால் இங்கு ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களுமாகுமென்று கூறலாம். அரசாங்கத்தாரின் அதிகாரம் செவ்வனே நிறைவேறும் பொருட்டு இங்கிலீஷ் பாஷையை இந்தியர்கள் பலருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியதாயிற்று. அதற்காக அரசாங்கத்தார் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தார்கள். அப்பள்ளிக் கூடங்களில் இந்தியர்கள் வெகு ஆவலோடும் உற்சாகத்தோடும் அப்பாஷையைக் கற்றுக்கொண்டார்கள். இங்கிலீஷ் பாஷையில் பயிற்சி பெற்றவர்களுக்குச் சர்க்கார் உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டன. உத்தியோகங்களில் ஆசை கொண்டவர்களுக்கு இப்பாஷை மிகவும் அவசியமாயிற்று.

இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் ஆங்கில தேச சரித்திரம் பாடமாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டு வந்தது. அதை வாசித்தவர்கள் மேல் நாட்டாரின் அரசியல் இயல்பு, ராஜ்ய நிர்வாகம், பிரிட்டிஷ் பிரஜைகளின் பிறப்புரிமைகள், முதலியவைகளை நன்கு அறிந்து கொண்டார்கள். அவ்வறிவைக் கொண்டு பிரிட்டிஷார் நடாத்தி வந்த ஆட்சி முறைகளை இந்தியர்கள் ஆராய்ந்து பார்க்கத் தலைப்பட்டார்கள். அதிகார வர்க்கத்தினரோடு அவர்கள் தங்கள் உரிமைகளைப் பற்றிப் போராடவும் ஆரம்பித்தார்கள். தேச மகா ஜனங்களின் முன்னேற்றத்தில் கவலை கொண்டு அவர்களின் க்ஷேமலாபங்களைப் பாதுகாக்கும் பொருட்டுப் பல வழிகளில் முயற்சி செய்யவும் முன்வந்தார்கள்.

சுய நலத்தை நாடியே அமுல் நடத்தி வந்த அதிகார வர்க்கத்தினர்களின் செயல்கள் தேச மகா ஜனங்களுக்கு திருப்தியை உண்டு பண்ண வில்லை. ஜனங்களின் கஷ்டங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தன. இவைகளைச் சகிக்க முடியாமல் தேசமகா ஜனங்கள் படித்த இந்தியர்களிடம் முறையிடவாரம்பித்தார்கள். எனவே, கிராமங்களில் வசிக்கும் லட்சக் கணக்கான ஜனங்களுக்கும் அதிகார வர்க்கத்தினர்களுக்கும் நடுவிலிருந்து கொண்டு அவர்களின் நன்மையை நாடிப் படித்தவர்களும், வக்கீல்களும் பல கஷ்டங்களுக்குட்பட்டுப் பயமன்னியில் தேச ஊழியம் செய்து வருகிறார்களென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். படிப்பில்லாத கிராமவாசிகளும் பட்டினங்களிலுள்ளோரும் திருப்தியோடும் சுகமாகவும் யாதொரு புகாரன்னியில் வாழ்ந்து கொண்டு வருகிறார்களென்று நினைப்பது பிசகாகும். அன்று தொட்டு இந்த நிமிஷம் வரையில் அநேக குறைகள் நம்முள்ளிருப்பதோடு அவைகள் நம்மைத் துன்பப்படுத்திக் கொண்டு வருகின்றன. இக்குறைகளையும், துன்பங்களையும் நீக்குமாறு ஏராளமான பூஸ்திதியுடைய பிரபுக்களும், வியாபாரிகளும், படித்தவர்களும், பொது ஜனங்களும் வழிதேட வேண்டியது அவசியமாகும்.

கிராமங்களில் பல பிரபுக்களிருக்கிறார்கள். அவர்களை அண்டினவர்களும் நம்பினவர்களும் ஆயிரக்கணக்கான பேர்களிருக்கிறார்கள். வாயில்லாப் பூச்சிகளான குடியானவர்களும் தொழிலாளர்களும் கணக்கற்ற பேர்களிருக்கிறார்கள். இவர்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி உழைக்க வேண்டிய கடமை செல்வாக்குள்ள பிரபுக்களுடையதாகுமென்று நாம் கூற வேண்டுவதில்லை. அவர்கள் அக்கடமையைச் செய்து வருகிறார்களா? இல்லையா? என்பதைச் சற்று ஆராய்வோம்.

ஆராய்ந்து பார்க்குங்கால், நமது பிரபுக்கள் தங்களுடைய கடமையைச்சரிவர செய்ய வில்லை யென்றே நாம் துணிந்து சொல்லுவோம். காரணமென்ன? அதிகார வர்க்கத்தினர்களிடத்தில் அவர்களுக்குள்ள பயம்தான். பாமர ஜனங்களோடு ஒத்துழைத்து அவர்களுக்காகப்பாடு பட்டால் ஒரு கால்கவர்ன்மெண்டாருக்குக் கோபமுண்டாகுமோ வென்று பயந்து ஒதுங்கி நின்றதின் பயனாகத்தான் நம் தேசத்தின் முன்னேற்றம் பலவாறாகத் தடைப்பட்டிருக்கின்றது. பொது ஜனங்களோடு சரிசமானமாகவும் சகோதர பாவத்தோடும் ஒத்துழைத்துத் தேச சேவை செய்தால் தங்களுடைய அந்தஸ்தும் செல்வாக்கும் குறைவு பட்டுப்போய் விடுமோவென்றும், பரம்பரையாக அனுபவித்துவரும் தங்களுடைய ஜாகீர்களையும், இனாம்பூமிகளையும், பட்டங்களையும், பென்ஷன்களையும் அதிகார வர்க்கத்தினர்கள் பறிமுதல் செய்து விடுவார்களோவென்றும் பயந்து நம் பிரபுக்கள் ஒன்றும் செய்யாமல் வீண் காலம் கழித்து வருகிறார்கள். நம் பிரபுக்களில் பலர் அதிகார வர்க்கத்தினர்கள் தேவலோகத்திலிருந்து வந்தவர்களெனக்கருதி அவர்களின் கிருபைக்குப் பாத்திரர்களாக வேண்டுமென்றெண்ணித் தம் மதிப்பையும் அந்தஸ்தையும் பாராட்டாமல் கேவலம் அவர்களின் ஊழியர்களாய் நடந்து கொண்டும் அதிகாரிகளின் தயவிற்காக ஏராளமான பணத்தைச் செலவழித்தும் வருவது மிகவும் விசனிக்கத் தக்கதே.

மேல் நாடுகளில் அதிலும் இங்கிலாந்திலுள்ள பிரபுக்கள் இத்தகைய குணமுடையவர்களல்லர். அவர்கள் தங்கள் தேசத்தின் மீது அன்பு பாராட்டித் தங்கள் பொருளையும் செல்வாக்கையும் தேச நன்மைக்காக உபயோகப்படுத்துகிறார்கள். மேலும் அவர்கள் கௌரவ உத்தியோகங்களை வகித்துத் தமது தேசத்திற்கு ஊழியம் செய்கிறார்கள்; பார்லியமெண்டில் ஸ்தானங்களைப் பெற்றுத் தங்களைத் தேர்ந்தெடுத்த வோட்டர்களின் நன்மையை நாடி உழைக்கிறார்கள்; பார்லியமெண்ட் மகாசபையில் பயமன்னியிலும் தைரியத்தோடும் ஜனங்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறார்கள்; சாதாரண ஜனங்களோடு யாதொரு வித்தியாசமன்னியில் பழகுகிறார்கள்; அங்குள்ள அதிகாரிகளின் அக்கிரமச் செயல்களைக் கண்டிக்கிறார்கள். ஆகையினால் தான் அங்குள்ள ஜனங்கள் எல்லாவிதமான சுதந்தரங்களையும் அனுபவித்துவர இடமேற்பட்டிருக்கிறது.

நமது தென் இந்தியாவிலோ நாம் கூற வேண்டுவதில்லை. இங்குள்ள பிரபுக்களுக்குத் தகுந்த அந்தஸ்தும், செல்வாக்கும், படிப்புமிருந்தும் அவர்கள் பொது விஷயங்களில் தலைமை "வகிக்காமல்யார் எக்கேடுகெட்டுப்போனால் நமக்கென்ன"வென்று அசிரத்தையாயிருக்கிறார்கள். ஆனால் சில தர்மசிந்தனையுள்ள பிரபுக்கள் இப்பொழுது மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு முன்வர ஆரம்பித்து விட்டார்கள். சிலர் முன் வந்தால் மாத்திரம் போதாது. நூற்றுக்கணக்கான பேர்கள் தேச ஊழியம் செய்ய முன்வரவேண்டும். ஏனெனில் அவர்களும் இத்தேசத்தில் பிறந்தவர்களே. இத்தேசத்திய பாமர ஜனங்களுக்குள்ள பாத்தியங்களும் சுதந்தரங்களும் அவர்களுக்கும் அவசியமானவைகள் தான். இதை அவர்கள் மறக்கக்கூடாது. பொது ஜனங்களோடு தாராளமாய் கலந்து வேலை செய்வதனால் பிரபுக்களாகிய அவர்களுக்குரிய யோக்கியதை ஒரு நாளும் குறையாது. ஏழைகளையும் செல்வாக்கில்லாதவர்களையும் சுகத்தில் வைப்பது அவர்களுடைய கடமையல்லவா? ஏழைகளின் நிலைமையைப் பற்றி அதிகாரிகளுக்கு விஸ்தாரமாக எடுத்துச்சொல்வது அவர்களுடைய பொறுப்பல்லவா? ஆயிரக்கணக்கான

ரூபாய்களை நிலத்தீர்வையாகவும் வரிகளாகவும் சர்க்காருக்குச் செலுத்துவோரின் வார்த்தைகளுக்கு மதிப்பில்லையென்று எவராகிலும் சொல்ல முடியுமா? அல்லது கவர்ன்மெண்டார் தான் அப்பிரபுக்களின் வார்த்தைகளையும் அபிப்பிராயங்களையும், எச்சரிக்கைகளையும் அலட்சியம் செய்வார்களா? பிரபுக்கள், பெரிய பணக்காரர்கள், பெரிய வியாபாரிகள் இவர்களுக்குத் தான் எத்தேசத்திலும் செல்வாக்குண்டு. இவர்கள் போன்றவர்களுக்குக் கவர்ன்மெண்டார் கௌரவப்பதவிகளையும், பட்டங்களையும் அளித்துக் கைவசப் படுத்திக் கொள்வதுண்டு. பட்டங்களைப் பெற்று விட்டால், தாட்சிண்யம் ஜாஸ்தியாகி விடுகிறது. தன் மதிப்பும் சுதந்திரமும் போய் விடுகின்றன.

ஆகையால் எமது நண்பர்களே! கௌரவத்தையும், அந்தஸ்தையும் பட்டங்களையும், அதிகாரவர்க்கத்தினரின் தயவையும் மோட்ச சாம்ராஜ்யமென்று கருதாதேயுங்கள். பாமர ஜனங்களோடு கலந்து கொள்ள வேண்டிப் பங்களாக்குள்ளேயே தங்கியிராமல் வெளியே வாருங்கள். தேசபக்தர்களும் ஜனங்களும் செய்து வரும் தேசசேவையில் சேருங்கள். பணஉதவி செய்யுங்கள்; அண்டினவர்களைக் கைத்தூக்கி விடுங்கள். ராஜரீக அறிவை உங்களைச் சார்ந்தவர்களுக்குப் புகட்டுங்கள். புதிய சீர்திருத்த சட்டத்தின் அமைப்பைத்தெரிந்து கொள்ளுங்கள். அச்சீர்திருத்தங்கள் நமது கோரிக்கைகளுக்குத் தக்கபடி இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பாருங்கள். சீர்திருத்த சட்டம் போதாதென்றும் அதிருப்திகரமாக விருக்கிறதென்றும் நீங்கள் அபிப்பிராயப்பட்டால், அவ்வபிப்பிராயத்தைத் தைரியத்தோடு வெளியிடுங்கள். அது குற்றமாகாது. கவர்ன்மெண்டார் உங்கள் பேரில் கோபம் கொள்ளமாட்டார்கள். உங்களுடைய சொத்தை அபகரித்துக் கொள்ள மாட்டார்கள். உங்கள் பட்டங்களைப் பிடுங்கிக் கொள்ளமாட்டார்கள். உண்மையை அறிவிப்பதில் உங்களுக்கு என்ன பயம்? நீங்களல்லவா ஜனத்தலைவராகவிருக்கவேண்டும்? உங்களைப் போலொத்தவர்களல்லவா சட்டசபைகளுக்குப் பிரதிநிதிகளாகப் போகவேண்டும். நீஙகள்தான் சட்ட சபைகளில் பொது ஜனங்களுக்காக வேண்டிய காரியங்களைச்சாதித்துக் கொடுக்கவேண்டும். கவர்ன்மெண்டார் இதற்காகத்தான் உங்களை அழைக்கிறார்கள்.

மாண்டேகு செம்ஸ் போர்டு ரிபோர்ட்டிலும் பூஸ்திதியுடைய இந்தியப்பிரபுக்கள் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியும் உரிமைகளைப் பற்றியும் 147—வது பாராவில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. இதை நீங்கள் கவனித்துப் படித்துப் பார்த்தால் உண்மை அறிவீர்கள்.

உங்களுக்குச் சட்டசபைகளில் தனிஸ்தானங்களிருப்பது வாஸ்தவம் தான். அது மாத்திரம் போதாது. உங்களுடைய தாய்நாட்டிற்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமை ஒன்றுண்டு. அதாவது உங்கள் சகோதரர்களின் கஷ்டங்களை நிவிருத்திப்பதேயாகும். அதை உணர்ந்து நடப்பீர்களென்று நம்புகிறோம். வாருங்கள்! வெளியே வாருங்கள். தேசத்தொண்டு செய்யுங்கள். வீண் பயம் வேண்டாம்.

இடை நிலை விளக்கு.

சவரன்.

இம்மாதம் 12ந் தேதிக்குப் பிறகு சவரன் விலை ரூபா பத்தாக விற்குமென்றும் இந்தத் தேதிக்கு முன்னதாகவே ஜனங்கள் தங்களிடமிருக்கும் சவரன்களைக் கஜானாவில் கொடுத்துவிட்டுப் பதினைந்து ரூபா பெற்றுக்கொள்ளலாமென்றும் கவர்ன்மெண்டார் ஓர் அறிக்கை வெளியிட்டனர். இவ்வறிக்கைக்கு இணங்கி ஜனங்கள் தங்களிடமிருந்த சவரன்களைக் கவர்ன்மெண்டாரிடம் கொடுத்துவிட்டார்கள். ஜூலை மாதம் 12-ந் தேதி கடந்து போய் இன்றைக்கு ஒரு வாரத்திற்கு மேலாகிறது. கவர்ன்மெண்டார் சவரனைப் பத்து ரூபாய்க்குக் கொடுப்பதாகக் காணோம். இதை யறிந்த கொள்ளை லாபம் சம்பாதிக்கும் வியாபாரிகள் சவரனைப் பதினாறு ரூபாய்க்கு விற்று வருவதாகத் தெரிகிறது. சென்னையிலும் பிற நகரங்களிலும் பவுன் பதினைந்து ரூபாய்க்கு விற்கப்படவில்லை. ஆனால், பிரஞ்சு நகரங்களில்பவுன் பன்னிரண்டு ரூபாயக்கு விற்கப்படுவதாக நமது காரைக்கால் நிருபர் எழுதுகிறார். கவர்ன்மெண்டார் இன்னும் சில மாதங்கள் வரை, தாங்கள் முன் அறிவித்ததுபோல் பவுனைப் பத்து ரூபாய்க்கு விற்காமல் போனால், வியாபாரிகள் பவுன் விலையைஉயர்த்தி இருபது ரூபா வரையில் விற்றுப் பணம் சம்பாதிப்பார்கள். இதனால், பொது ஜனங்கள் நஷ்டமடைவதோடு கவர்ன்மெண்ட் மீதும் அவநம்பிக்கை கொள்வார்கள். இந்த அவநம்பிக்கைக்கு இடமின்றிக் கவர்ன்மெண்டார் நடந்து கொள்வார்களென்று நம்புகிறோம்.

கிராம முனிசீப்கள் சம்பளம்.

சென்ற வாரம் நடந்த சென்னைச் சட்டசபைக் கூட்டத்தில் கிராம முனிசீப்களின் சம்பளத்தை மாதம் பதினைந்து ரூபாயாக வேனும் உயர்த்தவேண்டுமென்று கனம் பி. வி. நரசிம்ம ஐயர் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய கனம்டாட் ஹண்டர், கிராம முனிசீப்களுக்குப் பதினைந்து ரூபா கொடுத்தால் வருஷம் 32 லட்சம் ரூபா அதிகம் செலவாகுமென்றும், இந்த அபாரச் செலவு சீர்திருத்தப்படி அமைக்கப்படும் கவர்ன்மெண்டாருக்கு அதிக கஷ்டத்தைக் கொடுக்குமென்றும், கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கள் ஏற்படுத்தப்பட்ட பிறகு கிராம முனிசீப்களுக்கு அதிக வேலையிராதென்றும் கூறினார். இவர் இவ்வாறு சொல்லுவரென்பது எல்லோரும் எதிர்பார்த்ததாகும். ஆனால் கனம் வி. கே. இராமானுஜாச்சாரியார் இத்தீர்மானத்தை ஆட்சேபித்துக் கூறிய காரணங்கள் கிராம முனிசீப்களுக்கும் பொது ஜனங்களுக்கும் திருப்தியைத் தராவென்பது நமது அபிப்பிராயம். பல வருஷங்களுக்கு முன்பு கிராம முனிசீப்கள் பணக்காரர்களாயிருந்திருக்கலாம். இப்போதும் அவர்களில் எல்லோரும் பணக்காரர்களாயிருக்கிறார்களென்று கனம் இராமானுஜாசாரியார் சாதிப்பது தகாததாகும். பல்லாரியில் கிராம முனிசிப் பதவியிலிருக்கும் ஏழைகளை நீக்கிவிட்டுப் பணக்காரர்களை நியமிக்கலாமென்று கனம் ஆச்சாரியார் எந்த எண்ணத்துடன் கூறினரோ? தெரியவில்லை. உண்மையாகவே, பல்லாரியிலும்தஞ்சை போன்ற மற்ற ஜில்லாக்களிலும் ஏழை கிராமமுனிசிப்களிருக்கிறார்கள். ஏழைகிராம முனிசிப்களில்லையென்று கனம் இராமானுஜாச்சாரியார் சட்ட சபையில் கூறினாலும் பொது ஜனங்கள் அக்கூற்றை நம்பமாட்டார்கள். இஃதொரு புறமிருக்க,கிராம முனிசீப்களுக்குக் கௌரவ வேலைகளும் கொடுக்கப்படவில்லை. அவர்கள்கேவலம் பணத்தை வசூலித்துக் கொடுக்க அற்ப சம்பளத்திற்கும் அலவன்ஸுக்கும் கிராம முனிசிப்பதவியை வகித்து வருவார்களென்று நினைப்பது தவறானதாகும்.

மறு ஸெட்டில்மெண்ட்

கூட்டுக் கமிட்டியார் இது விஷயமாகக் கூறியுள்ள அபிப்பிராயங்களை அனுசரித்து நிலத்தீர்வையைப்பற்றியும், வரி விதிக்கலைப்பற்றியும் ஒரு மசோதா சட்ட சபை முன்கொண்டுவரப்படும் வரையில் மறுஸெட்டில் மெண்டின் வேலைகளை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கனம் சிவராவ் சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இது எல்லோரும் எதிர்பார்த்தபடி தோற்றுப் போய்விட்டது. இதன் வேலைகள் நிறுத்தப்பட்டுப் போனால் சுமார் மூவாயிரம் பேர்கள் வேலையின்றிருப் பார்களென்று கனம்டாட் ஹண்டர் அனுதாபமாகக் கூறினார். இவரது அனுதாபத்தை நாம் பாராட்டினாலும், லட்சக்கணக்கான ஏழை மிராசுதார்கள் மறு ஸெட்டில்மெண்ட் வேலையினால் வருந்துகிறார்களென்பதை இவர் ஏனோ கவனிக்கவில்லை? தென்னிந்திய நிலச் சுவான்தார்களின் பிரதிநிதியான கனம் டி. ஆர். இராமச்சந்திர ஐயர் சட்டசபையில் என்ன செய்கின்றனரோ? அறியோம். இவரன்றோ இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்க வேண்டும்? எலக்ஷன் ஆகுமுன்னர் மிராசுதார்களுடையநன்மையை நாடுவதாகவேஷம் போட்ட கனம் இராமசந்திர ஐயர் இப்போதல்லவோ தம் அக்கரையைக் காட்டிக் கவர்ன்மெண்டாருடன் போராடவேண்டும்? மறு ஸெட்டில் மெண்ட் வேலைகளைச்சிறிதுகாலம் நிறுத்தி வைக்கக் கவர்ன்மெண்டார் மனமில்லாதிருப்பது அவர்களுடைய பழைய பிடிவாதகுணத்தைக் காட்டுகிறது.

க்ஷயரோகத்திற்குக் காரணம்.

இங்கிலாந்திலுள்ள காம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் போதகாசிரியராயிருக்கும் டாக்டர் காபட் என்பவர் க்ஷயரோகத்திற்குக் காரணத்தைக் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார். அரை வயிறு கால் வயறு சாப்பிடுவதும் நெருக்கமான இடத்தில் குடியிருப்பதுமே இந்த க்ஷயரோகத்திற்கு காரணங்களென்றும் இதன் உண்மையை அறியவிரும்புவோர்கள் தொழிற்சாலையில்ஓர் அறையில் வேலை செய்யும் தொழிலாளர்களை பரீட்சித்துப் பார்த்தால் அறிந்துகொள்ளலாமென்றும் பகிரங்கம் செய்திருக்கிறார். வியாதி வந்த பிறகு ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் கட்டுவதைவிட வியாதி வருமுன்னே இதற்குரிய காரணங்களை நீக்க வேலை செய்வது நலதாகும். இவர் கூறும் காரணங்கள் சரியானவை யென்று டாக்டர் மதே என்பவரும் அத்தாட்சி கூறுகிறார். இந்தியாவில் கால்வயிறு சாப்பிடுவோரும் தினம் ஒரு வேளை கஞ்சி குடிப்போரும் லட்சக்கணக்காகவிருக்கின்றனர். இந்தியர்களுடைய கஷ்டங்களை எப்போது கவர்ன்மெண்டார் நீக்குவரோ? போதாக்குறைக்கு நகரங்களில் ஜன நெருக்கடியும் அதிகரித்து வருகிறது. இதை நீக்க முன் வருவோரும் ஒருவருமிலர்.

பயமுறுத்துகிறார்கள்.

ரெயில்வேஸ்டேஷன்களில் இரவில் ஐரோப்பியப் பிரயாணிகள் தங்குவதற்கு அறைகள் கட்டிவிடப்பட்டிருக்கின்றன. அவ்வறைகளை இந்தியர்களுக்கும் விடவேண்டுமென்று கனம் சிவராவ் சட்ட சபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதை ஆட்சேபித்துக் கவர்ன்மெண்ட் தரப்பில் பேசிய கனம் மிஸ்டர் டேவிட்ஸன் ரெயில்வே அதிகாரிகளுக்குப் பரிந்து பேசி அவர்கள் பயமுறுத்தி எழுதியிருந்த கடிதத்தையும் வாசித்துக் காண்பித்தார். இப்போது ஐரோப்பியப் பிரயாணிகளும் அமெரிக்கப் பிரயாணிகளும் அனுபவித்து வருகிற ரெயில்வே ஸ்டேஷன் அறைகளை இந்தியர்கள் தாங்களும் உபயோகிக்க வேண்டுமென்று கேட்டால், அவ்வறைகளை ஒருவருக்குமின்றி மூடிவிடுவதாக ரெயில்வே அதிகாரிகள் பயமுறுத்துகிறார்கள்! இவர்களுடைய பயமுறுத்தலுக்கு இந்த இருபதாம் நூற்றாண்டில் பயப்பட்டு அடங்கிப்போவர் ஒருவருமில்லை யென்பதை ரெயில்வே அதிகாரிகள் திட்டமாய் அறியவேண்டும். இந்தியாவில் இருந்துகொண்டு இந்தியர்களுடைய பணத்தில் கொழுத்திருக்கும் ரெயில்வே கம்பெனியார் பொது ஜனங்களெல்லோருக்கும் சௌகரியங்கள் செய்யவேண்டியிருக்க, வெள்ளை நிறத்தினர்களுக்கு மாத்திரம் சகாயம் செய்வதானது சகிக்கமுடியாத காரியமாகும். கனம் சிவராவ், கனம் அருமை நாதம் கனம் நரசிம்மராஜு மூவரும் ரெயில்வே அதிகாரிகள் பயமுறுத்தலைக் கண்டித்து இந்தியர்களுடைய மனோ நிலையை அறிவித்ததானது சரியானதாகும்.

மிஸ்டர் மாண்டேகுவின் எச்சரிக்கை!

மகாத்மா காந்தி விஷயமாகவும் கிலாபத் விஷயமாகவும் பார்லிமெண்டில் சில மெம்பர்கள் கேட்ட கேள்விகளுக்கு இந்தியா மந்திரியான மிஸ்டர் மாண்டேகு பதிலளிக்கும்போது, காந்தி உயர்ந்த குணமுடையவரென்றும், அவர் செய்த தேச சேவை அரியதென்றும் கூறிவிட்டு, இப்போது அவர் இறங்கியிருக்கும் துறை அபாயகரமானதென்றும் சென்ற வருஷம் போல் அவரது செயலைக் கவர்ன்மெண்டார் பார்த்துக்கொண்டிருக்க முடியாதென்றும், இந்தியா கவர்ன்மெண்டாரும் மாகாண கவர்ன்மெண்டார்களும் (ஒரு சமயம் எதிர்பாராத சம்பவம் நேர்ந்தால்) எல்லாவிதமான பரிகார முறைகளைக் கையாண்டு வருகிறார்களென்றும் அறிவித்தார். கலகம் நேர்ந்தால் அதை அடக்குவது கவர்ன்மெண்டின் கடமையாகும் யென்பதை யாவரும் அங்கீகரிப்பர். கலகம் நிகழாமலிருப்பதற்கு வேண்டிய பரிகார முறைகளை முன்னரே கையாண்டு தயாராயிருப்பதைப்பற்றியும் ஒருவரும் ஆட்சேபிக்கமாட்டார். ஆனால், இந்தியா கவர்ன்மெண்டாரும், மாகாண கவர்ன்மெண்டார்களும் அவசியமானவைகளைச் செய்வரென்றும், அவர்கள் செய்யும் காரியத்தில் தமக்கு நம்பிக்கையிருக்கிறதென்றும் கூறியதையே நாம் ஆட்சேபிக்கிறோம். சென்ற வருஷம் இந்தியா கவர்ன்மெண்டாரையும் மாகாண கவர்ன்மெண்டாரையும் நம்பியிருந்ததினால் ஜலியன் வாலாபாக்சம்பவம் நேர்ந்தது. டயர், ஜான்ஸன், பாஸ் ஓர்த்போன்ற கொடியர்கள் இஷ்டம் போல் பல திய காரியங்களைச் செய்யலானார்கள். இவ்வருஷமும் ஜனங்கள் கூட்டங்கூடிப் பேசுவதைக் கண்டு மருண்டு சில்லரை அதிகாரிகளும் பெரிய அதிகாரிகளும் பல துஷ்ட காரியங்களைச் செய்யமாட்டார்களென்பதற்கு என்ன அத்தாட்சியிருக்கிறது?

தஞ்சை நகர வாசிகளுக்கு ஒரு யோசனை.

தஞ்சை நகரம் சுகாதார நிலையில் மிகவும் தாழ்ந்ததாயிருக்கிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். நகர சுகாதாரத்தைச் சீர்படுத்துவதா? அல்லது அதை இன்னும் கேள்வி முறையின்றிக் கேவலமான நிலையில் வைத்திருப்பதா? இந்த இரண்டு கேள்விகளையும் நம் நேயர்கள் கவனிக்கவேண்டும். தஞ்சை நகர முனிஸிபல் அதிகாரிகள் சுகாதார நிலையைத் திருப்திகரமாகச் சீர்படுத்துவார்களென்று நினைப்பது பேதமையாகும். மேலும், அவர்கள் பொது ஜனங்களின் ஒத்துழைப்பின்றி ஒரு காரியமும்செய்யமுடியாதென்பது நிச்சயம். இந்நிலையில் நாம் ஒருயோசனை கூறுகிறோம் சென்னையில் பொது ஜன உபகாரிகள்சங்கமொன்றிருக்கிறது. அதிலுள்ள அங்கத்தினர்கள் பற்பல துறைகளில் இறங்கிப் பொது ஜன நன்மைக்குற்றவழிகளில்வேலைசெய்துவருகிறார்கள் அவர்களில் ஒரு சிலர் சென்னை நகரத்தின் சுகாதார நிலையைக் கவனித்து எங்கெங்கத் தெருக்கள் விளக்கின்றியும் குப்பைகளோடும், சாக்கடை ஜலம் நிரம்பியும் இருக்கின்றனவோ அவைகளைப்பற்றி அதிகாரிகளுக்கு அறிவித்து வேண்டியவற்றைச் செய்கிறார்கள். அவர்கள் தாங்கள் விஜயம் செய்யும் தெருக்களில் குடியிருப்போர்க்குச் சுகாதாரத்தின் அவசியத்தையும் அத்துடன் பல தொத்து வியாதிகளுண்டாவதையும் எடுத்துச் சொல்வார்கள். அவர்கள் இவை போன்ற பல காரியங்களைச்சுகாதார அபிவிருத்திக்குச் செய்துவருவது எல்லோராலும் கொண்டாடப்பட்டிருக்கிறது அந்தச் சங்க முறையில் நம் தஞ்சை தேசபக்தர்களில் சிலர் முன் வந்து நகரசுகாதார அபிவிருத்திக்கு வேலை செய்வார்களோ?

முஸ்லிம்கள் ஹிஜரத் செய்கிறார்கள்.

சென்ற திங்கட்கிழமை வந்த செய்தியால், சுமார் 5000முஸ்லிம்கள் ஸிந்துமாகாணத்திலிருந்து ஆப்கானிஸ்தானத்திற்கு ஹிஜரத் செய்யத் தயாராயிருக்கிறார்களென்று தெரிகிறது. சில தினங்களுக்கு முன்பு அம் மாகாணத்திலிருந்தே சுமார் 2000 முஸ்லிம்கள் ஹிஜரத் செய்தார்கள். இன்னும் மத வைராக்யமுள்ளமுஸ்லிம்கள் ஆயிரக்கணக்காக ஹிஜரத் செய்வார்களென்று சொல்லப்படுகிறது.

சென்னைச் சட்டசபை.

நடவடிக்கைகளின் சுருக்கம்

(நமது விசேஷ நிருபர் எழுதுகிறார்)

சென்னை 20—7—20

இம்மாதம் 13ந்தேதி செவ்வாய்க் கிழமை சென்றவார “போதினி”யில் அறிவிக்கப் பட்டிருந்ததுபோல், சென்னைச் சட்டசபையின் கூட்டமொன்று சென்னை ஸெனட் மண்டபத்தில் கூடியது. அநேகமாக எல்லா அங்கத்தினர்களும் விஜயம் செய்திருந்தார்கள். இவர்கள் சுமார் 10½ கேள்விகளைக் கேட்டனர். கவர்ன்மெண்டார் இவைகளில்பல கேள்விகளுக்குத் திருப்திகரமாகப் பதில் அளிக்காதது விசனிக்கத் தக்கது. லார்ட்பெண்ட்லண்டு காலத்தில் அதிகார வர்க்கத்தினரின் மனப்பான்மை எவ்வாறிருந்ததோ அது சிறிதும் லார்ட் வில்லிங்டன் ஆட்சியில் குறையவில்லையென்று நாம் சாவதானமாகக்கூறலாம், ஆனால் லார்ட் வில்லிங்டன் ஜனப்பிரதிநிதி மெம்பர்களின் விருப்பத்திற்குக் கூடிய வரையில் இணங்கப் பார்க்கின்றார். ஆயினும் என்ன? அதிகாரவர்க்கத்தினர்களின் இஷ்டப்படியே அவரும் எல்லாக் காரியங்களிலும் நடக்க வேண்டியிருக்கிறது. கனம் மெம்பர்கள் கேட்ட கேள்விகளும் அவைகளுக்குக் கவர்ன்மெண்டார் கூறிய பதில்களும் ஒருபுறமிருக்க தீர்மானங்களை எடுத்துக் கொள்வோம். மொத்தம் இக்கூட்டத்தில் கனம் மெம்பர்கள் 31 தீர்

மானங்கள் கொண்டுவந்தார்கள். இவைகள் இன்னின்னவை யென்றும் இவைகளின் கதியென்னவாயிற்றென்றும் நம் சகோதரர்கள் அறிய விரும்புவார்கள். ஆகையினால் தீர்மானங்களின் கருத்தை ஈண்டு எழுதுவோம்.

தீர்மானங்கள்

கனம் நரசிம்மராஜு (1) விசாகப்பட்டணம் ஜில்லா மறுசெட்டில் மெண்டில் பழையசெட்டில் மெண்ட்டுப்படி இருபோக சாகுபடியாகும் இனும் நிலங்களை இப்போதும் அவ்வாறே கருத வேண்டுமென்றும் அவைகளுக்குப் பசலி ஜாஸ்தி தீர்வை விதிக்கக் கூடாதென்றும்,

(2) விசாகப்பட்டணம் ஜில்லாவில் மறுசெட்டில் மெண்டில், திரும்ப வாங்கிக் கொள்ளப்பட்ட இனும் நிலங்களைத் தொகுக்கும்படி உத்தரவு செய்தால் போதுமென்றும் பிறகு வரிவிதிக்கலாமென்றும் ஆகிய இரண்டு தீர்மானங்களைக் கொண்டு வந்தார். இவ்விரண்டு தீர்மானங்களும் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்பட்டன. கனம் பி. வி. நரசிம்ம ஐய்யர் (3) கிராம முனிசீப்களுக்கு அவர்கள் ஜீவனம் செய்யும்படியான சம்பளம் ரூபா பதினைந்தாவது கொடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்து பலமாக வாதித்தார். முடிவில் அது தோற்றுப்போய் விட்டது (4) பிறகு அவர் கோயமுத்தூர் நீலகிரி ஜில்லா மலைப்பிராந்தியங்களில் வசிக்கும் காட்டுஜாதிகளை உயர்த்த வேண்டுமென்றும் அதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் மற்றொரு தீர்மானம் கொண்டு வந்தார். கவர்ன்மெண்டார் வழக்கம்போல் பல சாக்குகள் கூறி தீர்மானத்தைத் தோற்கடித்து விட்டனர்.

கனம் சிவராவ்.

(5) கனம் சிவராவ் துங்கபத்ரா நீர்ப்பாசனக்கால்வாயை வெட்டித் திறக்கவேண்டுமென்றும் இதனால் பல்லாரி, கர்நூல், கடப்பை அனந்தப்பூர் நெல்லூர் முதலிய ஐந்து ஜில்லாக்களிலுள்ள 40 லட்சம் ஏகராக்கள் சாகுபடியாகுமென்றும் முன்னர் மதிப்பிட்டபடி இதற்குச்செலவு 12 கோடியாகுமென்றும் இந்தக்காரியத்தைக் கவர்ன்மெண்டார் அவசியம் செய்து முடிக்கவேண்டுமென்றும் தீர்மானம் கொண்டுவந்தார். இதுவும் எதிர்பார்த்தபடியே தோற்றுப்போய் விட்டது. பின்பு (6) கனம் சிவராவ், ரெயில்வேக்களில் இரவில் தங்குவதற்கு ஐரோப்பியர்களுக்கு இருக்கும் இடங்களை இந்தியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றும் (7) மறுசெட்டில் மெண்ட் விஷயமாக ஒரு மசோதா கொண்டுவந்து சட்டம் செய்யப்படும் வரையில் மறுசெட்டில் மெண்ட் வேலையை நிறுத்தி வைக்கவேண்டுமென்றும் (8) இம்மாகாணத்தில் காகிதத் தொழிலுக்குரிய வசதிகளை விசாரித்து அறிவிக்க வேண்டுமென்றும் (9) லோகல் போர்டுகளின் பிரசிடெண்டுகள் உத்தியோகஸ்தரல்லாதவர்களாகவும் சாதாரணமாகத் தெரிந்தெடுக்கப் பட்டவர்களாகவுமிருக்க வேண்டுமென்றும் (10) சப் ரிஜிஸ்டிரார்களின் [illegible]ளத்தை உயர்த்த வேண்டுமென்றும் (11) [illegible] ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களுக்கு அலவன்ஸை உயர்த்தவேண்டுமென்றும் (12) இம்மாகாணத்தில் ஆயுர்வேத மருந்து மூலிகைகளை வளர்ப்பதற்கு ஒரு மாடல் தோட்டம் ஏற்படுத்த வேண்டுமென்றும் (13) வருமான வரி விதிப்பதற்குக் கணக்குகளை ஆங்கிலத்திலேனும் அல்லது தேசபாஷையிலேனும் வைத்துக் கொள்ளலாமென்றிருப்பது மார்வாரிகளுக்குக் கஷ்டமேற்படுகிறதென்றும் அவரவர்கள் தம் சொந்த பாஷையில் கணக்கு வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட வேண்டுமென்றும் (14) தொழிலாளர்களின் நிலைமையை விசாரித்து அறிவிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் (15) பொது ஜனஉபயோகத்திற்காக விருக்கும் ரெயில்வேக்கள் டிராம்வேக்கள் முதலிய விடங்களில் வேலை நிறுத்தங்கள் ஏற்படாமலிருக்கக் கவர்ன்மெண்டார் முயற்சி செய்யவேண்டுமென்றும் ஆக 11 தீர்மானங்கள் கொண்டு வந்தனர். இவைகளில் துங்கபத்ரா நீர்ப்பாசனத் தீர்மானமும் ரெயில்வேக்களில் இந்தியர்களுக்குத் தங்க இடம் கொடுத்தல் மறுசெட்டில் மெண்ட் வேலைகளை நிறுத்திவைத்தல், மருந்து மூலிகைகளை வளர்ப்பதற்குத் தோட்டம் ஏற்படுத்தல் முதலிய தீர்மானங்களும் தோற்றுப் போய்விட்டன. மிகுதியுள்ள ஏழு தீர்மானங்களையும் கனம் சிவராவ் வாபீஸ் வாங்கிக் கொண்டார்.

கனம் வேங்கடபதிராஜு.

கனம் வெங்கடபதிராஜு ஜில்லா சம்பந்தமான முக்கிய விஷயங்களை பற்றி கலெக்டர்கள் உத்தியோகஸ்தரல்லாதவர்களோடு ஆறுமாதத்திற் கொருமுறை கலந்து யோசிக்க வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானத்தைக் கவர்ன்மெண்டார் பிடிவாதமாய்த் தோற்கடித்தனர் (16) இப்போது கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் அரசிறை கமிட்டியார் கவர்ன்மெண்டின் வரவு செலவுகளைப் பற்றி அவ்வப்போது யோசிக்க அடிக்கடி கூட்டம் கூடவேண்டுமென்றும் (17) கவர்ன்மெண்டின் பல இலாகாக்களில் செலவுகளைக் குறைப்பதற்கு ஓர் உத்தியோகஸ்தரல்லாத இந்தியரும் ஓர் இந்திய உத்தியோகஸ்தரும் மிஸ்டர் நாப்புக்கும் ஆலோசனைசெய்ய நியமிக்கப் படவேண்டுமென்றும் தம்மால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை கனம் வேங்கட பதிராஜு வாபீஸ் வாங்கிக் கொண்டது விசனிக்கத் தக்கது. (18) இன்னும் கனம் வேங்கடபதிராஜு விசாகப்பட்டணத்திலிருக்கும் இன்ஜிரிங் பாடசாலையை யொட்டி மெகானிகல் இன்ஜினீரிங் ஸெக்ஷன் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றும் (19) இப்போது 10 மணி முதல் 4 மணி வரையில் பள்ளிக்கூடத்தை நடத்தும் வழக்கத்திற்குப் பதிலாகக் கூடியவரையில் காலையிலும் மாலையிலும் பாடசாலையை நடத்த உத்தரவளிக்க வேண்டுமென்றும் (20) ஜனசங்கியைக் கணக்கு எடுக்கும் போது ஜனங்களுடையதொழில், வருமானம் முதலிய பொருளாதாரநிலை விஷயமாகவும், கணக்கு எடுக்க வேண்டுமென்றும் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்பட்டன.

கனம் சிவக்ஞானம் பிள்ளை

(21) கனம் சிவக்ஞானம் பிள்ளை மூன்று தீர்மானங்கள் கொண்டுவந்ததில் முனிஸிபல் சேர்மெனும் போர்டு பிரிஸிடெண்டுகளும் மத்திய அதிகாரிகள் மூலமாகக் கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட் அனுப்பும்போது, அவ்வதிகாரிகள் ஏதேனும் இவர்களுக்கு விரோதமான அபிப்பிராயங்கள் எழுதினால் அவ்வபிப்பிராயங்களின் நகல் பிரதி ஒன்று அனுப்பித்தர வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் "கவர்ன்மெண்டார் முனிஸிபல் சேர்மென் அல்லது போர்டு பிரிஸிடெண்டுகள் மீது நடவடிக்கைகள் எடுக்க எண்ணினால் அப்போது மத்திய அதிகாரிகளின் அபிப்பிராயங்களின் நகல் பிரதி முன்னதாகவே அனுப்பித்தர முடியும்" என்று திருத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது ஒருவாறு சந்தோஷமாகும். மற்ற தீர்மானங்களில் ஒன்று (22) திருநெல்வேலி ரயில் ஸ்டேஷன் லெவல் கிராஸிங்கேட்டைப் பற்றியதாகும். மற்றொன்று (23) தூத்துக்குடி ஆஸ்பத்திரியைப் பற்றியதாகும். இவ்விரண்டும் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன. (24) கனம் அகமத்தம்பி மரைக்காயர் முத்துப்பேட்டையில் இந்து முஸ்லிம்களுக்குள் ஏற்பட்ட கலகத்தைப் பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதுவும் பலத்த விவாதங்களுக் கிடையில் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்பட்டது.

கனம் ராஜா.

(25) கனம் எம். வி. இராஜா பிராமண விதவைகளுக்குச் சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதவா சிரமத்தில் எல்லாஸ்திரிகளும் அங்குதங்கி வாசிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், (26) மதுபானக்கடைகள் ஏற்படுத்த உத்தரவு கொடுக்கும் போர்டில் மதுவிலக்கு சங்கத்தாருக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்றும் இரண்டு தீர்மானங்கள் கொண்டு வந்தார். முதல் தீர்மானம் தோற்றுப்போய் விட்டது. இரண்டாவது தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(27) கனம் வேங்கடப்பையா மாணவர்களுக்கு முக்கியமாகவுள்ள இரண்டு தீர்மானங்களைக் கொண்டுவந்தார். எஸ். எஸ். எல். ஸி. மாணவர்கள் இங்கிலீஷைதவிர மற்றப்பாடங்களைத் தங்கள் தாய்பாஷையில் கற்க விரும்பினால், அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு அவ்வாறு கற்றுக் கொடுக்கும்படி உத்தரவு செய்யவேண்டுமென்றும் பரீட்சை வினாக்களுக்கு மாணவர்கள் தாய்பாஷையிலேயே பதில் எழுதும்படி சௌகரியம் செய்யவேண்டுமென்றும் கொண்டுவரப்பட்ட தீர்மானம் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்பட்டாலும், கல்வி இலாகா தலைவரான மிஸ்டர் லிட்டில் ஹெயில்ஸ் அனுதாபமாகப் பேசி மாணவர்கள் தாய் பாஷையில் கற்க விரும்பினால் கற்கலாமென்றும் அவர்களுக்குப் பரீட்சையும் தாய் பாஷையிலேயே செய்யத்தாம் கவர்ன்மெண்டாருக்குச் சொல்லுவதாகவும் பதில் அளித்தார். (28) கனம் மாதவராஜா மெடிகல் டெப்போவிலிருந்து கவர்மெண்ட் வைத்திய சாலைகளுக்கு அனுப்பப்படும் மருந்துகள் என்ன விலைகளுக்கு அனுப்பப்படுகின்றனவோ அதேவிலைக்கு லோகல் போர்டுகளுக்கும் அனுப்பித் தரவேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் ஒப்புக்கொள்ளப்பட்டது. மிகுதியுள்ள தீர்மானங்கள் அடுத்த கூட்டத்திற்குத் தள்ளிவைக்கப் பட்டன. ஆக 34 தீர்மானங்களில் மூன்று தீர்மானங்களைக் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டனர். ஏழு முக்கியமான தீர்மானங்களைத் தோற்கடித்தனர். தள்ளிவைக்கப்பட்டது போக மிகுதியுள்ள 24 தீர்மானங்களை வாபீஸ்வாங்கிக் கொள்ளும் படி செய்தனர். இந்த முறைச்சட்ட சபைக்கூட்டம் தகு

விசேஷ வியாசங்கள்.

இந்தியாவின் வறுமை நீங்கவழி.

கவர்ன்மெண்டார் முயற்சி செய்யவேண்டும்.

நம்முடையதேசம் ஒரு நூற்றாண்டுக்குமுன் செல்வம் நிறைந்த தேசமாயிருந்தது. இதற்குக்காரணமென்ன? இந்தியாவின் நிலவளமும் நீர்வளமுமேயாகும். இந்திய ஜனங்களில் பெரும்பாலோர் விவசாயத் தொழிலையே கைப்பற்றி வந்தார்கள். அக்காலததில் விவசாயத்துக் கேற்ற சௌகரியங்கள் இந்தியாவில் அமைந்திருந்தன. ஒரு காலம் செழிப்புற்றிருந்த தேசம் தற்காலம் ஏழ்மைத்தனத்தையடைந்திருப்பதற்கும் அதன் மக்கள் பிணியாலும் பசியாலும் வருந்துவதற்கும் காரணங்கள் யாவை? இவைகளெல்லாவற்றையும் ஈண்டுக்குறிப்பிடுவது சாத்தியமில்லை. ஆனால், முக்கியமான காரணமொன்றிருக்கிறது. அதாவது நம் ஜனங்கள் விவசாயத்தை அலட்சியம் செய்வதாகும். மேனாட்டு நாகரிகக்காற்றால் நிலங்களைக்கவனிப்பதும் விவசாயத்தொழிலைச் செய்வதும் நம் ஜனங்கள் கௌரவக் குறைவென்று நினைத்துவருகிறார்கள். போலிக் கௌரவம் பாராட்டி அதற்கிசைந்தவாறு நடந்து கொள்வதனால், கடனாளியாகி அவர்கள் தங்களிடம் உள்ள நிலங்களையும் விற்று வருகிறார்கள். இந்தியாவின் நிலையையும் இந்திய ஜனங்களின் ஏழ்மைத்தனத்தையும் கவனித்துப்பார்த்தால் எந்த மனிதனுக்குத்தான் மனம் வெந்து புண்ணாகாது? வீணில் வருந்துவது பயனில்லையாகையால், நாம் தற்கால விவசாய நிலையைக் கவனிப்போம்.

மிஸ்டர் மெக்கன்னா என்ன சொல்லுகிறார்?

இந்தியாவின் விவசாய அபிவிருத்தி ரிபோர்ட்டையும் சென்ற வருஷ வரவு செலவுத்திட்டக்கணக்குகளையும் பார்த்தால், விவசாய விஷயமாகவுள்ள சில முக்கிய விஷயங்கள் வெளிப்படும். இந்த இரண்டும் இந்தியா கவர்ன்மெண்டாரின் உத்தரவால் வெளியிடப்பட்டிருப்பவைகளாதலால் இவைகளை நம்தேசவிவசாய அபிவிருத்தியில் லாத்தையுள்ளவர்கள் வாசிக்கும்படி விரும்புகிறேன். இந்தியா கவர்ன்மெண்டின் விவசாய நிபுணரான மெக்கன்னா என்பவர் விவசாய அபிவிருத்தி ரிபோர்ட்டில் இந்தியாவில் விவசாய அபிவிருத்திக்கு ஏராளமான வசதிகளிருக்கின்றனவென்றும் ஜனங்கள் இவ்விஷயத்தில் கொஞ்சம்அக்கறைசெலுத்தினால் இந்தியாவின் வறுமை நீங்குமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால்கவர்ன்மெண்டாரும் நீர்ப்பாசனசவதிபோன்ற மற்ற சௌகரியங்களையும் செய்துகொடுக்கவேண்டும்.

இந்தியாவிற்கு ஜீவாதாரஉணவுப்பொருள்அரிசி. இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் மொத்த நிலங்களில் சுமார் 76 லட்சம் எக்கர்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயிகள் ஒரு காரியம் செய்யவேண்டும். அவர்கள் ஒற்றையலகு சாகுபடி செய்தால் அதாவது பயிர்களை ஒவ்வோர் அலக்காகப்பிரித்து நெருங்கநடாமல், கலக்கநட்டால் ஏகர் ஒன்றுக்கு 400 அல்லது 500 பவுண்டு நிறையுள்ள தான்யங்கள் அதிகம் கிடைக்குமென்று கூறியிருக்கிறார். சென்னை ராஜதானியிலுள்ள நம் ஜில்லாவிலும் திரிச்சி ஜில்லாவிலுமுள்ள விவசாயிகள் ஒற்றையலகு சாகுபடி செய்து சமீப காலந்தொட்டு நல்ல லாபத்தை அடைந்து வருகிறார்களென்றும் செங்கற்பட்டு திருவள்ளூர் முதலான விடங்களில் நாற்றைப் பிடுங்கி நடாமல் அப்படியே வளர விட்டுத் தானியங்களை அறுப்பதானது தகுந்த பலனைக் கொடுக்கவில்லை யென்றும் சொல்லப்படுகிறது. மிஸ்டர் மெக்கன்னா கூறிய பிரகாரம் இந்தியா முழுமையும் அனுஷ்டிக்கப்பட்டால் வருஷம் ஒன்றுக்கு மூன்னூறு கோடி ரூபாய் லாபம் கிடைக்குமென்றும் நெல்லைத் தவிர மற்ற தானியங்களையும் விருத்திக்குக் கொண்டுவரலாமென்றும் கூறியிருக்கிறார். உதாரணமாக கோதுமையை எடுத்துக் கொள்ளலாம். ஜனங்கள் கோதுமையை நூதன முறைப்படி பயிரிட்டு வந்தால், இப்போது கிடைப்பதை விட எக்கர் ஒன்றுக்கு 22 ரூபாய் அதிகம் கிடைக்குமென்றும் இந்தியாவில் கோதுமை பயிரிடப்பட்டு வருகிற நிலங்களிலிருந்து 40 கோடி ரூபாய் லாபம் கிடைக்குமென்றும் கணக்கிட்டிருக்கிறார்.

கரும்பிலும் லாபமுண்டு.

கரும்பிலும் லாபமிருக்கிறது. உயர்ந்த ஜாதிக் கரும்புகளை நூதன முறைப்படி பயிரிட்டால் எக்கர் ஒன்றுக்கு 700 மணங்குக்குக் குறையாமல் சர்க்கரை கிடைக்குமென்று அறிவித்திருக்கிறார். இப்போது சாதாரண கரும்புகளில் 300 மணங்குகளுக்கு மேற்போகாமல் சர்க்கரை கிடைத்து வருகிறதாம். பம்பாயிலுள்ள மஞ்சிரா என்னும் கரும்புச் சாலையில் 50 டன் நிறையுள்ள கரும்புகளில் 13362 பவுண்டு நிறையுள்ள சர்க்கரை காய்ச்சி எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாகக் கிடைத்த ரூபாய் 954. சகல செலவுகளும் போக 494 ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. இவ்விதமாக நூதன முறையில் கரும்புப் பயிர் செய்து வந்தால் அதன் மூலமாக 75 கோடி ரூபாய் கிடைக்கும். மேற்கூறிய நெல், கோதுமை, கரும்பு ஆகிய இவைகள் சாகுபடி செய்யப்படும் நிலங்களிலிருந்து வருஷம் 1 க்கு 500 கோடி ரூபாய் கிடைக்குமென்று மிஸ்டர் மெக்கன்னா வற்புறுத்துகிறார். நூதன முறைகளின்னவின்னவை யென்பதை மிஸ்டர் மெக்கன்னா அறிவிக்கவில்லை. இந்த நூதன முறைகளைக் குடியானவர்களுக்கு அறிவிப்பதும் அவர்களுக்குப் பண உதவி புரிந்து விவசாயத்தை அபிவிருத்திசெய்வதும் கவர்ன்மெண்டின் கடமையென்று நாம் சொல்ல வேண்டுவதில்லை.

சென்ற வருஷத்தில் விவசாய அபிவிருத்திக்குக் கவர்ன்மெண்டார் செலவழித்த பணம் மிகவும் சொற்பமாகும். கவர்ன்மெண்டார் இத்துறையில் செய்யும் முயற்சிகள் பயன் படக்கூடியவையாயிருக்க வேண்டுமானால் தாலுக்காதோறும் ஒரு விவசாயப் பண்ணை ஏற்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளுக்கு விவசாய நூதன முறைகளை அனுபவ மூலமாகவும் பிரசங்க மூலமாகவும் துண்டுப்பிரசுரமூலமாகவும் அறிவிக்கவேண்டும். இப்போதிருக்கிற வ்வசாய காலேஜும் பள்ளிக்கூடங்களும் போதா. விவசாயத்தை விருத்திசெய்து ஏழை ஜனங்களின் வறுமை நீக்கம்பெற வேண்டுமானால் குறைந்தது கவர்ன்மெண்டார் வருஷம் பத்து கோடி ரூபாய் செலவழித்துக் கொஞ்சம் கொஞ்சமாக 500 கோடி ரூபாயையும் எடுத்துக் கொள்ளலாம். அப்படி எடுத்துக்கொண்டால் ஜனங்கள் இன்னும் கொஞ்ச வருஷங்களில் வறுமையினின்றும் நீங்கிச் சுகமாயிருப்பார்கள்.

சென்னை சட்டசபை, 6ம் பக்கம் தொடர்ச்சி.

வந்த அங்கத்தினர்கள் தங்கள் வேலை வியர்த்தமாயிற்றென்று மன ஏக்கங்கொண்டுத் தம் ஜில்லாக்களுக்குச் சென்றிருப்பார்கள்.

இவை தவிர நகரநிர்மாண மசோதா சட்டமாக்கப்பட்டது. லோகல் போர்ட்ஸ் மசோதா ஆலோசனைக் கமிட்டிக்கு விடப்பட்டது. நீர்ப்பாசன வரிதிருத்த மசோதா கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்பட்டது. கவர்னர் அக்கிராசனம் வகிக்காத காலத்தில் வைஸ்பிரிஸிடெண்ட் என்ற தோரணையில் சட்டசபைக் கூட்டத்திற்கு அக்கிராசனம் வகித்த ஸர். பி. இராஜகோபாலச்சாரியாரைக் கவர்னர் புகழ்ந்தாலும் அவர் பல சமயங்களில் அங்கத்தினர்கள் அருவருக்கும்படி நடந்து கொள்கிறாரென்பதை நான் ஈண்டு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

உலக அரசியல் நிலை

தீர்க்கதரிசி எழுதுகிறார்.

உலகம் எல்லோரும் திடுக்கிடும்படி நிமிஷத்திற்கு நிமிஷம் மாறிவருவதைப் பார்த்தால், சமீபத்தில் எதிர்பாராத சம்பவங்கள் பலநேருமென்று ஊகிக்கிறேன். அன்றாடம் வரும் அந்நிய நாட்டுத் தந்திச் செய்திகளைக் கவனமாக அவைகளின் உட்பொருளை அறிந்து படிப்பவர்கள் உலகப்போக்கை நன்கறிவார்கள். உலகத்துத் தேசங்களெல்லாம் காலப்போக்கை அனுசரித்து அதனதன் நிலையைத் திருத்திக் கொண்டுவருகின்றன. இந்தியாமாத்திரம் தன் இருப்பிடத்தை விட்டு அசையாமல், அதன் மக்கள் வாய்பொத்தி, கண்மூடி, மௌனம் சாதித்து நிற்பது நியாயமா? என்று நமது தலைவர் லாலா லஜபதிராய் கேட்கிறார். இவர் கேள்வி கேட்பதோடு நிற்கவில்லை. ஓர் அரிய யோசனையையும் கூறுகிறார். தெய்வானுகூலமாக இந்தியா சர்வதேசச் சங்கத்தில் ஓர் அங்கமாகச் சேர்க்கப்பட்டிருப்பது இந்தியர்களுக்கு நல்ல காலமென்றும் இந்தச்சமயத்தைக் கைவிடாது அவர்கள் உலகத்து எல்லாமுக்கிய தேசங்களில் பிரசார வேலை செய்யவேண்டுமென்றும், பிரசார வேலைகள் செய்வதோடு அவ்வந்தத் தேசங்களில் நடக்கும் சம்பவங்களையும் அவைகளுக்கும் இந்தியாவுக்குமுள்ள சம்பந்தங்களையும் கவனித்துப் பார்க்க வேண்டுமென்றும் கோஷிக்கிறார். இங்கிலாந்துக்குப் போய்த் திரும்பிய பிறகு திலகர் பெருமானும் மேற்குறிப்பிட்டவாறே பகிரங்கம் செய்துவருகிறார். ஸ்ரீஜத் பாபுவிபினசந்திர பாலரும்

நமது "இன்டிபென்டென்ட்" பத்திரிகையில் இதையே பறைசாற்றி எழுதிவருகிறார். இப்பெரியோர்களெல்லோரும் இவ்விஷயத்தைப் பற்றி ஒரு முகமாகக் கூறும்போது நாமென்ன செய்ய வேண்டும்? "கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பமென்" என்றும் ராமன் ஆண்டாலென்ன? ராவணன் ஆண்டாலென்ன? என்றும் இந்தியா என்பது ஒருபெரிய உலகமென்றும் இதைத் தவிர வேறுலகம் இல்லையென்றும் சொல்லப்பட்டுவரும் பைத்தியக் காரக்கதைகளை நம்மவர்கள் இனி நம்பிக்கொண்டிருப்பார்களா? மாட்டார்களென்பது நிச்சயம். பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்தில் இந்தியாஒருசம அந்தஸ்தையடையுமென்று பிரிட்டிஷ் அரசதந்திரிகள் மனதிலொன்றுவைத்துக்கொண்டு வெளியே மற்றொன்றுஇனிமையாகப் பேசினாலும் அப்பேச்சுக்களைக் கொண்டு நாம் போராடி சுதந்தரம் பெற நல்ல சந்தர்ப்பமும் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைக் கை நழுவவிடுதல் கூடாது.

நாமென்ன செய்ய வேண்டும்?

யுத்தம் நின்றபிறகு மேனாடுகளும் ஜப்பானும் அமெரிக்காவும் பொருளாதார அபிவிருத்தியிலும் அரசியல் முற்போக்கிலும் பூதபௌதிக சாஸ்திர ஆராய்ச்சியிலும் பகீரதவேலைகளைச் செய்து வருவதை நாம் கண்ணாரப்பார்த்து வந்தும், நம்மவர்கள் சும்மாவிருத்தல் கூடாது. நாமும் முன் செல்ல வேண்டும். இந்தியா உலக சம்பந்தமின்றி இனி இருக்கமுடியாதாகையால் அவ்வுலக நிகழ்ச்சிகளைத் தமிழ் மக்கள் அறியவேண்டி ஈண்டுப்பிரதி வாரம் தோறும் கோவையாகவும் அவைகளின் உட்பொருளை விளக்கியும் எழுதமுன் வந்திருக்கிறேன். ஆதலால் நேயர்கள் நான் எழுதிவருவதைக் கவனமாக விடாமல் படித்துவருவார்களானால் உலக நிலையை நன்கறிவார்கள்.

அயர் லாந்து

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சுய நிர்ணயமின்றி இந்தியாவைப்போல் அயர்லாந்தும்ஈஜிப்டும் ஏங்கி நிற்கின்றன. இந்தியாவின் கஷ்டம் ஒருபுறமிருந்தாலும், அயர்லாந்தின் நிலையை நினைக்க மிகவும் பரிதாபமாயிருக்கிறது. ஸின்பீனர்கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை நிராகரித்துத் தனியாக் ஒரு குடியரசு கவர்ன்மெண்டை ஏற்படுத்திக் கொண்டு ஆட்சி புரிகிறார்களென்று செய்திகள் கூறுகின்றன. பொழுது விடிந்தால் பிரிட்டிஷ் போலீஸார்களைச் சுடுவதும் கொள்ளைகள் அடிப்பதும் அயர்லாந்தில் ஸகஜமாயிருக்கின்றன. ஸின்பீனர்களுக்கு எதிர்க்கட்சியாக விருக்கும் யூனியனிஸ்டுகட்சிக்கு ஸர்எட்வர்டுகார்ஸன்என்பவர்தலைவர்பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஸின்பீனர்களை அடக்கி யூனியனிஸ்ட் கட்சியார்களைக் காப்பாற்ற முடியாதென்றால் பிறகு யூனியனிஸ்ட் கட்சியார் சேனைகளைக் கிளப்பி எழுந்து நிற்கவேண்டுமென்று அறிவித்திருக்கிறார். சில வாரங்களுக்கு முன்பு அயர்லாந்திலிருந்து செய்திகள் வந்தனபோல் இப்போது அதிகமாகச் செய்திகள் வரவில்லை. அங்கு என்ன நடக்கிறதோ? தெரியவில்லை. ஆனால் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாரும் பார்லிமெண்ட் அங்கத்தினர்களில் செல்வாக்குள்ளவர்களும் அயர்லாந்தின் நிலைமைப்பற்றிக்கலந்து யோசித்தனர்களென்று தெரிகிறது. இவர்கள் என்னமுடிவு செய்தார்களோ?

ஜெர்மெனி

கடைசியாக வந்த செய்தியினால் நேசக்கட்சியாரின் விருப்பப்படி அதாவது சமாதான உடன்படிக்கை நிபந்தனைகள் பிரகாரம் ஜெர்மெனி நடக்கவில்லை. ஜெர்மென் மந்திரிகள் சாக்குப் போக்குகள் கூறிகாலந்தாழ்த்திக் கொண்டு போகப்பார்க்கிறார்கள். ஜெர்மானியர்களின் குணங்களை அறிந்தநேசக்கட்சியார் பிடிவாதமாயிருக்கிறார்கள். மறுபடியும் நேசக்கட்சியாருக்கும் ஜெர்மெனிக்கும் யுத்தம் ஏற்படுமோ வென்று சந்தேகமுண்டாயிருக்கிறது. ஜெர்மெனூர்பிரதேசத்தை நேசக்கட்சியார்கைவசப்படுத்தயோசித்திருக்கின்றனர்போகப்போக விஷயம் எப்படிமுடியுமோ?

துருக்கி

பிரிட்டிஷார் பாலஸ்தீனத்தின் ஆட்சியை ஒப்புக்கொண்டு விட்டார். அதனால் சில கஷ்டங்களேற்பட்டாலும் அவைகளை நிவிர்த்தி செய்து விடலாமென்று பிரிட்டிஷ் அரசதந்திரிகள் தைரியமாக விருக்கிறார்கள். அரசர் பெருமானும் பாலஸ்தீனியர்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தி அனுப்பியிருக்கிறார். துருக்கியின் கொடிய ஆட்சியிலிருந்துபாலஸ்தீனியர்களைவிடுவிப்பதேபிரிட்டிஷாரின் நோக்கமாகுமென்று சொல்லப்படுகிறது. துருக்கி சமாதான உடன் படிக்கை விஷயமாகத் துருக்கி பிரதிநிதிகளின் கடிதத்திற்கு நேசக்கட்சியார் பதில் தயாரித்து விட்டனர். இவ்வுடன்படிக்கையில் முக்கியமாறுதல்கள் ஒன்றும் செய்யப்படவில்லை. இது நிற்க, துருக்கியில் உள்நாட்டுக் கலகம் அதிகரித்து வருகிறது. கிரீஸ் துருக்கிப் பிரதேசங்களைக் கைப்பற்றி வருகின்றதென்றும் துருக்கியிலுள்ள நேசியக்கட்சியினர் சிறைபிடிக்கப்பட்டு வருகிறார்களென்றும செய்திகள் கூறுகின்றன.

போல்ஷிவிகீகர்களின் முயற்சி

போல்ஷிவிக்கர்களின் வலை பெரிதாயிருக்கிறது. அவர்கள் எங்கும் வலைவீசுகிறார்கள். பர்ஷியன் விரிகுடாவிலுள்ள கடற்கரைப் பட்டினங்களில் போல்ஷிவிக்கர்கள் நுழைந்து அமளிசெய்கிறார்கள். அவர்களை எதிர்க்காமலிருந்தால் பர்ஷியாவின் தலைநகரமாகிய டெகரன் என்னும் நகரத்தைக் கைப்பற்றிக் கொள்வார்களென்று தெரிகிறது. பிரிட்டிஷார் பர்ஷியாவுக்கு உதவிசெய்ய வேண்டுமென்றும் இல்லையேல் பெரிய ஆபத்தாக முடியுமென்றும் டைம்ஸ்கூறுகிறது. போல்ஷிவிக்கர் ஆப்கானிஸ் தானத்திலும் தங்கள் வேலைகளைச் செய்துவருகிறார்கள்.

சீனாவில் கலகம்

உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு இராணுவ அதிகாரிகள் இஷ்டம்போல் தங்களுக்கு வேண்டிய நகரங்களைக் கைப்பற்றுகிறார்கள். இங்கிருந்து செய்திகள் ஒன்றும் வரவில்லை.

பிர்ம்மசரியம்.

தஞ்சை வக்கீல் ஸ்ரீமான் பி. வி. கிருஷ்ணசாமி ஐயர் எழுதுகிறார்.

ஜனங்கள் தகுந்த குருவையடைந்து அவர் கிருபையால் உபதேசம் பெற்று அந்தக்கரணத்தைச் சுத்தமாக்கிக்கொள்ள வேத சாஸ்திரம் முதலாய கிரந்தங்களில் சொல்லிய கர்மாக்களைச் செய்து, உபாசனையால் மனதை ஏகாக்ரப்படுத்தி ஞான விஷயமான விசாரணை செய்து ஆத்மா இது, அநாத்மா இன்னதென்ற விவேகத்தை அடைகிறார்கள். இவ்வாறு குருவையடைவது இலேசான காரியமல்ல. மாணவர்கள் குருகுலவாசம் செய்து, குரு சேவையைச் செம்மையாய் நடத்துவதற்காகக் கர்மாஷ்டமத்திலும், கர்ம ஏகாதசத்திலும், கர்மதுவாதசத்திலும் வயதில் உபநயனம் செய்யப்பெறவேண்டும். வேதாத்யயன விருத்திக்காக உபநயனம் விதித்திருக்கிறார்கள். உபநயனத்திற்குப் பிறகு வேதாத்யயனம் செய்ய ஆரம்பித்து தண்டம், யக்ஞோபவீதம், மேகலம் முதலியவைகளைத் தரித்துத் தகுந்த குருவினுடைய அனுக்கிரகத்தால், அத்யயனம் சரியாக நடக்கவேண்டி குருவைத் தேடவேண்டும்.

இந்தக் காலத்தில் வேதாத்யயனம் செய்வது சுலபமாகாததால், தேக ஸம்ரட்சணைக்காகக் காலத்திற்கேற்றபடி மாணவர்கள் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம். குருவினிடம் பக்தி சிரத்தையாயிருக்கவேண்டும். தவிரவும் இந்தத் தேகத்திற்குக் காரணமான மாதா பிதாக்களைச் சேவைசெய்யவேண்டும். பெற்றோர்களுக்குச் சமானமானவர்கள் ஒருவருமில்லை. அவர்கள் உத்தரவுப்படி நடக்கவேண்டும். எவ்விதம் நடந்தால் அவர்களுக்குத் திருப்தியுண்டாகுமோ அவ்வாறு செய்ய வேண்டும்.

ஏழு வயது முதல் 21 வயது வரையில் மூளையைச் சுத்தப்படுத்தி விருத்தி செய்ய வேண்டிய தவசியமானதால் படிப்பிலேயே மாணவர்கள் இந்த வயது காலங்களைக் கழிக்க வேண்டும். பலத்துடனும் தேகாரோக்கியத்துடனு மிருக்க வேண்டியதற்காக ஆகார நியமங்கள் அளவாயிருக்கவேண்டும். அதிகாலையில் எழுந்திருந்து ஸ்நானம் செய்து நித்திய கர்மாக்களை அனுஷ்டிக்க வேண்டும். அவ்விதம் செய்யாவிடில், அன்றைய தினம் பட்டினியாகவிருந்து ஜபத்தில் காலம் கழிக்கவேண்டும். சுலபமான ஆகாரம் சாப்பிட வேண்டும். ஆகாரத்தின் மீது கோபங்கொள்ளாமல் அதைச் சந்தோஷத்துடன் ஏற்று உட்கொள்ளவேண்டும். வேலை செய்வது தேகாரோக்கியத்தை உண்டுபண்ணக்கூடியது. பாலியத்தில் கடினமான வேலை செய்தால், தேகம் உறுதிப்பட்டுப் பலத்தைக் கொடுக்கும்.

மாணவ பிரம்மச்சாரிகள் தாம்பூலம் போடுதல் ஸங்கீதம் கேட்டல் இன்னும் பல துராப்பியாசங்களைப் பழக்கிக்கொள்ளுதல் முதலியவைகளை அடியோடு விட்டொழிக்கவேண்டும். பால்யத்தில் பிர்ம்மசரியத்தை அப்பியசித்துச்சுத்தமாகவிருந்தால், வயதானவுடன் நல்ல பலமும் வியாதியுமில்லாமலுமிருக்கலாம். சத்தியத்தை எக்காலத்திலும் அனுஷ்டிக்கவேண்டும். குருகுலவாசம் செய்து பிர்ம்மசரியத்தைக் காப்பாற்ற வேண்டும்.

உலகப்போக்கு.

ஜில்லா.

பிரதிதினம் சென்னையினின்று 6-45க்கு வருகிற போட்மெயில் இன்று (21—7—20) ஐந்துமணி தாமதமாக வந்து சேர்ந்தது. காரணம் கடலூர் சமீபம் ரெயில்வே லயனில் உடைப்பு ஏற்பட்டதென்று சொல்லப்படுகிறது.

*   *

சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டதும் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்காரால் திறந்துவைக்கப்பட்டதுமான தஞ்சைத் தேசீயப் பள்ளிக்கூடம் நன்கு நடைபெற்று வருகிறது. அதில் மாணவர்கள் தேசீயப் பிரசார வேலைக்கு முறையாகக் கற்பிக்கப்பட்டு வருகிறார்கள். பந்துலு ஐயர் என்ற ஸ்ரீமான் வேங்கடராமய்யர் மாணவர்களுக்குச் சாப்பாடு அளித்து வருகிறார். மாணவர்களும் ஊக்கத்துடன் படித்து வருகிறார்கள்.

*   *

இம்மாதம் 14ந்தேதி குத்தாலம் ரெயில்வே ஸ்டேஷனில் 1-வது போட்மெயில் ஸ்டேஷன் சமீபமாய் வந்தவுடன் என்ஜின் சக்கரம் உடைந்து வண்டி நின்றுவிட்டது. என்ஜின் சக்கரம் மாயவரமிருந்து வருவதற்கு ஒருமணி நேரம் வரை வண்டி நின்று கொண்டிருந்தது. இதல்லாமல் காலை ஏழுமணிக்கு மேற்கேயிருந்துவந்த சாமான் வண்டியும கிழக்கேயிருந்து வந்த லைட்என்ஜினும் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளவே இரண்டு விறகு வாகன் லயனை விட்டுக் கீழே இறங்கிவிட்டது. பிறகு மாலை 3 மணி வரையில் காத்திருந்து வேலை செய்ததில் வண்டி லயனில் ஏறிச்சென்றதென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

*   *

தஞ்சையிலுள்ள டாக்டர் ஜயராமய்யரின் விலையுயர்ந்த வைர மோதிரமும் பவுண்டன்பேனாவும் சென்ற ஞாயிற்றுக்கிழமை களவுபோய்விட்டன, களவுபோன மறுநாள் வைரமோதிரம் குப்பைத்தொட்டியில் கிடந்ததென்று ஒரு முனிஸிபல் சேவகன் ஸ்ரீமான் இராமசந்திர ராவ்கொண்டு வந்து கொடுக்க, டாக்டர் ஐயர் அவனுக்குப் பத்து ரூபாய் இனும் கொடுத்தார்.

*   *

திருவையாறு தேசீயகிளைச் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமான் வி. சுப்பிரமணிய முதலியார் 15—7—20ந்தேதி முதல் 21-7-20ந்தேதி வரையில் ஆறு தேசீயப் பிரசங்கங்கள் புரிந்தார்கள்.

*   *

கும்பகோணம் முனிஸிபல் கவுன்ஸிலின் கூட்டமொன்று இம்மாதம் 15ந்தேதி கூடியது. சேர்மென் மிஸ்டர் முத்துக்குமார செட்டியார் அக்கிராசனம்வகித்தார். 27 விஷயங்கள் வாதம் செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டன. அவைகளில் முக்கியமானது புதிய முறைப்படி 28 பேர் எலெக்ஷன் மூலமாகத்தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்றும் 4 பேர் நியமனம் செய்யப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

*   *

தூத்துக்குடி சப்-ஜட்ஜ் மிஸ்டர் வி. வி. கிருஷ்ணசாமி ஐயர் கும்பகோணம் ஸ்ரீ சாஸ்வதி பாடசாலைக்கு எதிராகத்தம் தாயார் ஞாபகார்த்தமாக ஒரு கிணறுவெட்ட 250 ரூபா கொடுத்து தவியிருக்கிறார்.

*   *

கும்பகோணம் மகாமககுளம் சுத்தம் செய்யப்பட்டு நல்லதண்ணீர் விடப்பட்டிருக்கிறது. பொற்றாமரைக்குளமும் பச்சையப்பாகுளமும் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. மகாமகத்திற்கு ஜனங்கள் ஏராளமாக வருவார்களென்று எண்ணி ஸ்டேஷனுக்குக் கீழ்புறத்தில் ஜனங்கள் வந்திறங்குவதற்கு இரண்டு ஸ்டேஷன்கள் கட்டப்படவேண்டுமென்று மகாமகம் கமிட்டியார் அறிவித்திருக்கின்றனர்.

*   *

கனம் கே. வி. அரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்கள் ஸ்டேட் கவுன்ஸிலுக்கு ஓர் அபேட்சகராக நிற்கிறார். அவர் தண்ணீர் குன்னம், நன்னிலம் முதலிய விடங்களுக்குச் சென்று ஸ்டேட் கவுன்சிலுக்கு அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கும் வோட்டர்களைப் பார்த்ததாகக் கேட்கச் சந்தோஷப்படுகிறோம்.

*   *

தஞ்சாவூர் எலிமெண்டரி ஸ்கூல் சூபர்வைசர் மிஸ்டர் வி. எம். சுந்தரராஜ ஐயர் கோயில்பட்டி ரேஞ்ச் சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராக நியமனம்.

*   *

அறந்தாங்கி எலிமெண்டரி ஸ்கூல் சூபர்வைசர் மிஸ்டர் பி. கிருஷ்ணஐயர் ஸ்ரீவல்லிப்புத்தூர் சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராக நியமனம்.

*   *

மிஸ்டா ஆர். கோபால ஐயங்கார் ரஜாவினின்று திரும்பியவுடன் நீடாமங்கலம் சப் ரிஜிஸ்டிராராக நியமனம்.

*   *

நீடாமங்கலம் சப் ரிஜிஸ்டிராராகவிருந்த மிஸ்டர் வி. சுவாமிநாத முதலியார் திருநெல்வேலி ஜில்லா கங்கைகொண்டான் சப் ரிஜிஸ்டிராராகநியமனம்.

*   *

மாயவரம் ரேஞ்சு பள்ளிக்கூட சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் கே. எஸ் இராமசந்திர ஐயர் திண்டுக்கல் ரேஜ்சுக்கு நியமனம்.

*   *

நாகப்பட்டணம் முனிஸிபல் கவுன்ஸிலராயிருந்தவரும் தர்மிஷ்டருமான ஸ்ரீமான் முத்து செட்டியார் இம்மாதம் 14ந் தேதி தம் இல்லத்தில் இறந்துவிட்டனரென்று அறிந்து விசனிக்கிறோம்.

*   *

தஞ்சாவூர் ஜில்லா முத்துப்பேட்டையில் ஒரு பொதுஜன சங்கம் இம்மாதம் முதல் தேதி ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கத்தின் மீது அபிமானம் வைத்து யாரேனும் தேச முன்னேற்றத்திற்கான பிரசங்கங்கள் புரிய வெளிவ்ருவார்களாவென்று மிஸ்டர் அ. ரெ. பாஹுமல் ஹமீத்மியான் கேட்கிறார்.

*   *

திருத்துறைப்பூண்டி தாலுக்கா அம்மலூர் ஸ்ரீ விநாயகர் செந்தமிழ் வித்தியாசாலையில் ஆனி மாசம் 11ந்தேதி திருவள்ளுவர் நிலயம் என்ற ஒரு சபை ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிரசங்கம் செய்யப்பட்டு வருகிறது. படிக்க விரும்[illegible]வர்களுக்கு இனாமாகப் படிப்பும் [illegible]

*   *

இம்மாதம் 15ந்தேதி வியாழக்கிழமை நாகை ரெயில்வே தொழிலாளர்களின் சங்கக்கூட்டம் கூடியது. அதில் சர்வதேசச் சங்கத்தொழிலாளர்களின் மகாநாட்டுக்கு இந்தியத் தொழிலாளர்களின பிரதிநிதியாக லாலா லஜபதிராய் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

*   *

1920ம் வருஷம் ஜூலை 10ந்தேதி நன்னிலம் சப் ரேஞ்சு உபாத்தியாயர்களின் மீட்டிங் ஒன்று நன்னிலத்தில் கூடியது. ரேஞ்சிலிருக்கும் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் மாணவர்களுக்குவேண்டிய பல பாடங்களைப்பற்றி உபந்நியாசம் செய்தார்கள்.

*   *

ஆகஸ்டு மாதம் 7,8ந்தேதிகளில் தஞ்சை மகாநாடு கூடும். காரியதரிசி மிஸ்டர் கிருஷ்ணசாமி ஐயர் மிலட்டேர், சீர்காழி, மாயவர முதலிய விடங்களில் பிரசங்க யாத்திரை செய்து வருகிறார்.

*   *

சென்னை மாகாண காங்காஸ் கமிட்டியார் கும்பகோணம் ஸ்ரீமான் என். கிருஷ்ணசாமி ஐயங்கார் சென்னை மாகாணச் சட்டசபைக்கும், ஸ்ரீமான் வி. பி. மாதவராவ் அரசாங்க சபைக்கும் நம் ஜில்லா பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்று வோட்டர்களுக்குச் சிபார்சுசெய்திருக்கிறார்கள்.

*   *

இம்மாதம் 17ந்தேதி தஞ்சை ரெயில்வே தொழிலாளர்களின் கூட்டம் மொன்று கூடியது. அதில் நாகைத் தொழிலாளர் சங்கத்தார் பிராமணர் பிராமணரல்லாதார் என்ற வித்தியாசம் பாராட்டிக் காரியதரிசி மிஸ்டர் வேங்கட்டாசாரியரை ராஜிநாமா செய்யும்படி பண்ணினதற்கு வருந்துவதாகவும், தொழிலாளர் முன்னேற்றத்திற்கு பிராமணரும் அல்லாதாரும் உதவி செய்யவேணடுமென்றும், நகைத்தொழிலாளர் சங்கத்தினின்று இந்தச் சங்கம் பிரிந்துபோவதாகவும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

உள்நாடு.

செப்டம்பர் மாதக்கடைசி வாரத்தில் தமிழ் வைத்தியர்களின் மகாநாடுகோயில்பட்டியில்கூடும்.

*   *

கிலாபத் பிரசாரவேலை செய்வோர்களில் ஒருவராகிய மிஸ்டர் கிருஷ்ணசாமி சர்மா 20ந்தேதி ஆத்தூர், 21ந்தேதி தர்மபுரி, 22ந்தேதி கிருஷ்ணகிரி, 23ந்தேதி பாலக்கோடு, 24ந்தேதி காவேரிப்பட்டினம், 25ந்தேதி நாமக்கல், 26ந்தேதி திருசெங்கோடு, 27ந்தேதி சங்கர்துர்க்கம், 28ந்தேதி தங்கிணி கோட்டை முதலியவிடங்களுக்கு முறையே பிரசங்க யாத்திரை செய்வர்.

*   *

பாளையங்கோட்டை சைவ சபையின் ஆதரவில் ஏழாவது சைவ மகாநாடு திருநெல்வேலி கணபதிவிலாச மண்டபத்தில் இம்மாதம் 23, 24, 25ந்தேதிகளில் நடைபெறும். திருவனந்தபுரம் மிஸ்டர் டி. லட்சுமணபிள்ளை அக்கிராசனம் வகிப்பார்,

*   *

சென்னை மகாஜன சபையின் நிர்வாக கமிட்டியார் கனம் பி. என். சர்மா இராஜப்பிரதிநிதி நிர்வாக சபைக்கு அங்கத்தினராக நியமிக்கப்பட்டதைப்பற்றி அவருக்குச் [illegible] அறி[illegible]

சௌராஷ்டிர பிராமண ஐந்தாவது மகாநாடு இம்மாதம் 17ந்தேதி மதுரையில் கூடியது. ஸ்ரீமான் எம். வி. சீதாராம் என்பவர் அக்கிராசனம் வகித்தார், இம்மகாநாட்டில் செய்யப்பட்ட முக்கிய தீர்மானங்களையும் அக்கிராசனரின் பிரசங்கத்தையும் அடுத்த பத்திரிகையில் வெளியிடுவோம்.

* *

கிருஷ்ணசாகர் என்று பெயரிடப்பட்ட கண்ணம்பாடி அணைக்கட்டுக்குத் தென்னிந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான ஜனங்கள்போய் வருகிறார்கள். அணைக்கட்டின்மேல் எட்டு அடி ஜலம் போகிறதாம். அணைக்கட்டு காவிரி தரைமட்டத்திலிருந்து 80 அடி உயரமாயிருக்கிறதாம்.

* *

சென்னை "நியு இந்தியா" பத்திரிகையின் மாதச்சந்தா காகிதவிலையை உத்தேசித்து வெளியூர்களுக்கு இரண்டேகால் ரூபாயாகவும் சென்னைக்கு இரண்டு ரூபாயாகவும் ஆகஸ்டு மாதம் முதல் உயர்த்தப்பட்டிருக்கிறது.

* *

இம்மாதம் 18ந்தேதி ஞாயிறுக்கிழமை மதுரை மிஸ்டர் ஜார்ஜ் ஜோஸப் சென்னைத் திருவல்லிக்கேணி கடற்கரையில் அரசியல் விஷயமும் சந்நியாசமும்" என்ற விஷயத்தைப்பற்றி ஓர் உபந்நியாசம் புரிந்து ஒத்துழையாமையின் முறைகள் சந்நியாசத்தின் கொள்கைகளாகுமென்று சொன்னார்.

* *

சென்னை நகரத்திற்குப் புதிய சீர்திருத்த சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கும் வோட்டர்களின் ஜாப்தா வெளியாய்விட்டதென்று விளம்பர சபையார் அறிவிக்கிறார்.

* *

கனம் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார் 17ந்தேதி "சுதந்தரமும் அதிகாரமும்" என்பதைப்பற்றி ச்சென்னை லிபரல்கட்சி சங்கத்தின் ஆதரவில் ஓர் உபந்நியாசம் புரிந்தார். அதில், அவர் ஜீவாதாரமான உரிமைகளைப்பற்றியும், மந்திரிகளின் சம்பளம், ஒத்துழையாமை, காங்கரஸ் கட்சியின் மாறுனபோக்குமுதலியவைகளைப்பற்றியும்விளக்கமாகக்குறிப்பிட்டார்.

* *

பம்பாயில் ரசாயன சாஸ்திர நிபுணரும், ரசாயனத் தொழிலில் மிகப்பிரசித்திப்பெற்றவருமான அறிஞர் டி. கே. கஜ்ஜர் என்பவர் ஹிருதய வியாதியால் சென்ற ஞாயிற்றுக்கிழமை பம்பாயில் இறந்துபோனதாகக்கேட்டு வருந்துகிறோம்.

* *

கிழக்காப்பிரிக்காவிலும் பிஜியிலும் இந்தியர்கள் வெள்ளையர்களால் அநாகரிகமாக நடத்தப்படுவதைப்பற்றிக் கண்டிக்கப் பம்பாயில் இம்மாதம் 14ந்தேதி ஒரு பொதுக்கூட்டம் கூடியது. ஸர். நாராயண் சந்தாவர்க்கர் அக்கிராசனம் வகித்தார். கிழக்காப்பிரிக்காவில் இந்தியர்களுடைய உரிமைகள் பறிமுதல் செய்யப்பட்டுக்கேள்விமுறையின்றி இந்தியர்களை வெளியேற்ற அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதைப்பற்றியும் ஒரு கண்டனத் தீர்மானம் செய்யப்பட்டது. பிறகு, பிஜித்தீவினின்று இந்தியாவுக்குத் திரும்பவிருக்கும் இந்தியர்களுக்குச் சௌகரியங்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று மகாத்மாகாந்தியால் பிரேரபிக்கப்பட்ட ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

* *

இந்தியாவுக்குச் சவரன் அந்நியநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படலாமென்றும் இதுகாறுமிருந்த நிர்ப்பந்தம் நீக்கப்பட்டுவிட்டதென்றும் இந்தியா கெஜட் கூறுகிறது.

* *

போஸ்டாபீஸ் சிப்பந்திகள், குமாஸ்தாக்கள், போஸ்டுமென்கள் முதலியவர்களெல்லோருக்கும் சென்னைப் போஸ்டுமாஸ்டர் ஜெனரல் ஒரு கடிதமெழுதிஅதில் போஸ்டுமென்களாகட்டும் மற்றவர்கள்யாராகட்டும்; அவசரப்படக்கூடாதென்றும் வெகுகாலம்காத்திருந்து பயன் கிடைக்கும் தருவாயில் புத்திகெட்டு ஒரு காரியமும் (வேலை நிறுத்தம்) செய்யக்கூடாதென்றும் போஸ்டல்கமிட்டியின்சிபார்சுகள் கவனிக்கப்பட்டு வருகின்றனவென்றும் போஸ்டல் இலாகாவைச் சேர்ந்தவர்களுடையக்ஷேமம்தம்முடையதென்றும் அநாவசியமாகப் பலருடையபேச்சைக் கேட்கக்கூடாதென்றும் ஒரு சுற்றுக்கடிதமனுப்பியிருக்கிறார்.

* *

இம்மாதம் 17ந்தேதி டில்லி போஸ்மோஸ்டர் அக்கிராசனத்தின்கீழ் போஸ்டல், ஆர்.எம் எஸ். சங்கத்தார் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதில் எல்லா இந்திய பர்மா போஸ்டு ஆபீஸ் ஆர். எம். எஸ. சங்கத்தார் கான்பரன்ஸ் ஸெப்டம்பர் மாதம் 5, 6ந்தேதிகளில் நடைபெறவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றனர். இவர்களுடைய நோக்கம் மாகாணம், ஜில்லா சங்கத்தார்களோடு யோசனைசெய்து, தங்களுக்கென ஒரு மத்திய சங்கத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுவதற்காகுமென்று தெரிகிறது.

* *

இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி சிறையிலிருந்த வங்காள வாசியான ஸ்ரீ ஜுத்ஜோதிஷ் சந்திரகோஷ் விடுதலை செய்யப்பட்டாரென்றும் அவருக்குக் கவர்ன்மெண்டார் மாதம் நூறு ரூபா தாற்காலிகமாகக் கொடுத்து வருகிறாரென்றும் தெரிகிறது,

* *

வங்காளத்தைச் சேர்ந்த ஹௌரா ஜில்லாவிலுள்ள காலூர் என்ற கிராமத்தில் அகூர்போரா என்பவன் ஒரு வெடிகுண்டைக் கண்டுபிடித்தான். அது புகைந்துகொண்டிருக்கும்போது அவன் அதைத் தொடவே அது வெடித்து அவனுக்குக் காயமுண்டாக்கிவிட்டதாம். அக்கிராமத்துப்பக்கத்திலும் இதேமாதிரியாக ஒரு வெடிகுண்டு கண்டு பிடிக்கப்பட்டதாம், அதனால் ஆறுபேர் காயமடைந்து மரண நிலையிலிருக்கிறார்களாம்.

* *

மகாத்மா காந்தி மௌலானா ஷௌகத்தலியுடன் இம்மாதம் 16ந்தேதி லாகூர்சென்றார். அங்கு ஒத்துழையாமையைப் பற்றி ஓர் உபந்நியாசம் செய்தார் பிறகு 19 ந்தேதி ராவில் பிண்டிக்குச் சென்றார்கள் அந்த விடத்திலும் பெரிய கூட்டம் கூட்டி புதியசட்ட சபையைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று வற்புறுத்தி மூஸ்லிம்களுக்கு எடுத்துச் சொன்னார்.

* *

இந்தியர்கள் தென் ஆபிரிக்காவை விட்டு இந்தியாவுக்கு வந்து விடுவது அவர்களுடைய க்ஷேமத்திற்கு நல்ல [illegible]ரும் தம்முடைய சிபார்சின் மீது இந்தமாதிரியாக யூனியன் கவர்ன்மெண்டார் இணங்கினரென்றும் ஸர்பெஞ்சமின் ராபர்ட்ஸன் கூறியதாக டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையின் பீடர் மாரிட்ஸ் பர்க் நிருபர் அறிவிக்கிறார்.

ஜன நோக்கம்.

தஞ்சை வர்த்தகர்கள் கவனிக்க.

ஐயா, இந்நகரில் வர்த்தகர்களனைவரும் ஒன்று கூடித் தங்கள் வர்த்தக சங்கத்தில் அமாவாசை தினம் கடைகளை மூடிவிடுவதென்று ஒரு தீர்மானம் செய்து அதைச்சென்ற இரண்டு மாதங்களாக அனுஷ்டித்து வருகின்றார்கள். இவ்வாறு செய்வதின் நோக்கமென்னவெனில், அமாவாசைதினத்தைத் தங்களுக்கு ஒய்வு நாளாகச்செய்துகொண்டு, அன்று சாயந்திரம் வியாபாரிகளனைவரும் ஸ்ரீபெஸண்ட் லாட்ஜில் கூடித்தங்கள் சங்கத்தில், வர்த்தகர்களின் முன்னேற்றத்திற்குரிய விஷயங்களைக் கவனிப்பதென்று தெரிய வருகிறது. இது நல்ல நோக்கம்; வர்த்தகருள் கூட்டுறவுணர்ச்சியை அதிகரிக்கின்றது. ஆயினும் இந்நோக்கத்தைக் கடைப் பிடிப்பதினால், சாமான்கள் வாங்கும் ஜனங்களுக்குச் சில குறைகள் ஏற்பட்டுள்ளன. அவையாவெனில், இந்நகரிலுள்ள ஜனங்கள் அமாவாசை தினம் கடைகள் திறப்பதில்லையென்று தெரிந்து கொண்டு, முன்னமேயே உபயோகத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொள்வார்களென்று சொன்னபோதிலும், இவ்வனுஷ்டானத்தை அறியாத பக்கத்துக் கிராமங்களிலிருந்துவரும் ஏழைஜனங்கள், காலையில் கூலிவேலை செய்துவிட்டுப் பிறகு 12-மணிக்குத் தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கி ஊர் சேல்வோமென்று கடைத்தெருவை நோக்கி வருகிறவர்கள், இவ்வாறு கடைகள் மூடப்பட்டிருந்தால் என் செய்வார்கள்? கஷ்டத்திற்குள்ளாகமாட்டார்களா? அன்று சம்பாதித்து அன்று சாமான்கள் வாங்கி வயறு வளர்க்கும் ஏழைகள் கதி என்ன ஆகும்? இதை வர்த்தகர்கள் கவனிக்கவேண்டும். இவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லுங்கால், அமாவாசை தினத்தை ஒய்வு நாளாகக் கொண்டாடக்கூடாதென்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரு நாள் முழுதும் கடைகளை மூடுவதற்கு பதிலாக, காலை 12-மணி வரையில் கடைகளை வைத்துவிட்டு, பிறகு மூடினால் எல்லோருக்கும் நலமாயிருக்கும்.

வர்த்தகருள் கூட்டுறவு உணர்ச்சி ஏற்பட்டு, எங்கும் வர்த்தகர்கள் சங்கங்களும் பாங்குகளும் ஏற்படவேண்டுமென்று பிரயத்தனப்படும் இந்நாளில், எவர்தான் வர்த்தகர்கள் சங்கம் கூடிப் பேசுவது சரியில்லையென்று சொல்லுவார்கள்? முழு நாளைக்குக் கடைகளை சாத்துவதற்குப் பதிலாக, காலை 12மணிக்குமேல் கடைகளை மூடினால் மிக்க நலமாயிருக்கும் இவ்விஷயத்தை நம் வர்த்தகர்கள் தங்கள் சங்கத்தில் கவனிப்பார்களாக.

ஒரு வர்த்தகன்

வாயில்லாப் பிராணிகள்.

ஐயா,

வாயில்லாப் பிராணிகளின் க்ஷேமத்தைக் கவனிப்பது, பகுத்தறிவுள்ள மானிடர்களின் கடமையல்லவோ? ஆங்காங்கு நம் நகர் வீதிகளில் வாயில்லாப் பிராணிகள் நீர் குடித்துத் தாகசாந்தி செய்து கொள்ளும்பொருட்டு கட்டிவைக்கப்பட்டிருக்கிற நீர்த் தொட்டிகளிலிருக்கும் அசுத்தமான நிலையைப்பார்க்கின், எவர்தான் பச்சாதாபப்படமாட்டார்கள் தொட்டிகளை சுத்தமாகக் கழுவவில்லை. நன்றாக வாய்வுபகவானின் அருளால், தண்ணீர் மண்ணீராகச் செய்யப்பட்டிருக்கின்றது. இவைகளிப்படியேயிருப்பின், நீர்குடிக்கும் நாலுகால் பிராணிகள் நோய் பிடித்து இறக்கமாட்டாவோ? இதை நம் நகராமுனிசிபாலிடியார்கள் கவனித்து வாயில்லாப் பிராணிகளின் மீது இரக்கங்கொண்டு தொட்டிகளைச் சுத்தம் செய்வதை அவர்களின் முக்கிய கடமைகளிலொன்றாகக்கொள்வார்களாக

பரிதாபப்படுவோன்

கிலாபத் குறிப்புகள்.

(2ம் பக்கம் தொடர்ச்சி)

முன்னர் பம்பாயிலுள்ள மத்திய கிலாபத் கமிட்டிக்குக் காரியதரிசியாக விருந்த மிஸ்டர் பத்ருதீன் அப்துல்லாகூர் தாம் காரியதரிசி பதவியை ராஜிநாமா செய்ததற்குரிய காரணங்களைக் கூறி ஒத்துழையாமை விஷயம் அபாயமானதென்றும் அது முஸ்லிம்களுக்குக் கெடுதியை உண்டாக்குமென்றும் முஸ்லிம்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளார்.

*　　*　　*

சென்ற மாதம் 23-ந்தேதி பார்லிமெண்டில் மெஸபொடோமியாவைப் பற்றிப் பலமாக வாதம் நடந்தது. அப்போது சில விஷயங்கள் வெளியாயின. அவைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

மாஜி மந்திரி மிஸ்டர் ஆஸ்குவித்:—பிரிட்டிஷாருக்கு மெஸபொடோமியாவில் என்ன பாத்தியமிருக்கிறது? ஒருவிதமான பாத்தியமில்லை.

மிஸ்டர் லாயிட் ஜார்ஜ்:—பணத்தையும் உயிரையும் மெஸபொடோமியாவில் ஏராளமாகச் செலவழித்திருக்கிறோம். 'அதனால் அங்குப் பிரிட்டிஷாருக்குப் பாத்தியமுண்டு.

மிஸ்டர் ஆஸ்குவித்:—அங்குச் சட்ட மூலமாக நியாய பாத்தியம் நமக்குக் கிடையாது.

மிஸ்டர் லாயிட் ஜார்ஜ்:—துருக்கியுடன் சமாதானம் செய்து கொள்ளும் உடன்படிக்கையில் திட்டமாகவும் தெளிவாகவும் நமது பாத்தியம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மிஸ்டர் ஆஸ்குவித்:—சர்வதேசச் சங்கத்தார் ஒருவர் தான் பிரிட்டிஷாருக்கு மெஸபொடேமியாவில் பிரவேசிக்க நியாய உரிமை கொடுக்கக் கூடியவர்.

மிஸ்டர் லாயிட் ஜார்ஜ்:—சர்வதேசச் சங்கத்தார் பிரிட்டிஷாருக்கு உரிமை கொடுக்கவில்லை. ஆனால், வெர்ஸேயில்ஸ் நகரில் நடந்த சமாதான உடன்படிக்கையில் இது விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மிஸ்டர் ஆஸ்குவித்:— மெஸபொடேமியாவினின்று துருப்புகளை அப்புறப்படுத்தாமலிருப்பது அழகல்ல. அவைகளை உடனே அப்புறப்படுத்த வேண்டும்.

மிஸ்டர் லாயிட் ஜார்ஜ்:— கவர்ன்மெண்டாரும் கனம் மெம்பர் கூறுவதைத் தான் யோசித்திருக்கின்றனர்.

மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் தம் பேச்சு முடிவில் ஆசியா மைனர் சம்பந்தமான விஷயங்களைப் பற்றி ஐரோப்பா தன் இஷ்டம்போல் கவனித்து வருமென்றும் மெஸ்டபாகெமலின் பயமுறுத்தலுக்கு ஐரோப்பா இணங்கிவிடாதென்றும் கஷ்டப்பட்ட பலன் கிடைக்கும் சமயத்தில பார்லிமெண்ட் மெம்பர்கள் அந்தப் பலனைக் கெடுத்து விடக்கூடாதென்றும் உருக்கமாகக் குறிப்பிட்டார்.

*　　*　　*

மெஸபொடேமியாவின் வருமானத்தைப் பற்றி மிஸ்டர் ஸ்பென்ஸர் என்பவர் கேட்ட கேள்விக்கு மிஸ்டர் போனர்லா மெஸபொடேமியாவைக் கைப்பற்றியது முதல் 1919-20 ம் வருஷம் வரையில் மொத்த வருமானம் சுமார் 7 லட்சமென்றும் அதில் சுமார் ஆறு லட்சம் வரையில் நிர்வாகச் செலவிற்குச் செலவழிக்கப்பட்டதென்றும் பதிலளித்தார்.

*　　*　　*

இம்மாதம் 16 ந் தேதி வந்த செய்தியினால், துருக்கி சமாதான உடன்படிக்கையைப்பற்றித் துருக்கிய பிரதிநிதிகள் இரண்டாவது முறையாக அறிவித்துக்கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது.

ஸ்திரி தர்மம்.

ஒரு பாரத புத்திரி எழுதுகிறார்.

பீடிகை

1. பாரத புத்திரிகளே! உங்கள் க்ஷேமத்தில் கருத்துவைத்துள்ள நான் சொல்லும் புத்திமதிகளைக் கேளுங்கள்; அவைகள் சாதாரணமானவைகளல்ல; என் வெகு கால அனுபவத்திலிருந்து உண்டானவைகளாகும்.

2. நம் முன்னோர்கள் தங்கள் வாழ்நாளைச்சௌக்கியமாகக் கழித்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை அமைதியாயிருந்தது.

3. காலம் பறக்கிறது. நமது வேலையோ அதிகமாயிருக்கிறது. நமது வேலைகளில் நாம் கண்ணுங் கருத்துமாயிருக்கவேண்டும். செய்யவேண்டிய காரியங்களை உடனுக்குடன் செய்; நாளை செய்யலாமென்றிராதே.

4. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். தெய்வபலத்தால் இன்று நாம் யௌவன தசையிலிருக்கிறோம். இத்தசையிலேயே நாம் செய்யவேண்டிய காரியங்களைச்செய்துமுடிக்கவேண்டும். இல்லையேல், கிழத்தனம் சீக்கிரம் வந்து சூழும்.

5. யௌவன தசையின் மகிமையே மகிமை; களங்கமற்ற யௌவன தசையில் முகஸ்துதி செய்வோர்களின் வார்த்தைகளைக்கேளாதே. அவர்கள் வார்த்தைகளில் விஷம் கலந்ததாயிருக்கும், அவைகள் காதுக்கு இனிமையாயிருந்தாலும், மனதைக்கலக்கிவிடும். இனிமையான வார்த்தைகளைக்கேட்டு அழிந்து போனவர்கள் சென்றவழி நமக்கு ஒரு மின்சாரவிளக்கு வெளிச்சம் போன்றதாயிருக்கிறது.

6. உலகில் நல்லவர்களைக் கெடுப்பதற்கு முகஸ்துதி செய்வோர்கள் பிறக்கிறார்கள். அவர்கள் மோசக்காரர்கள். அவர்களுக்கென ஒரு தனியான ரௌரவாதி நரக முண்டு. ஆகையால், முகஸ்துதி செய்வோர்களைக் கிட்டநெருங்கவிடாதே.

7. இந்தியாவின் செல்வப் புத்திரிகளே! ஸ்திரிகள் நாயகங்களே! குணசீலிகளே! என் புத்திமதிகளை ஹிருதயத்தில் பதியவையுங்கள். முற்கால ஸ்திரிமணிகளான சீதை, சாவித்திரி போன்றவர்கள் பதவியை நீங்கள் அடையலாம். சமாதானமும் பெருமையும் தேசத்தில் நிலவும். இந்திய மாதா முன்போல் தலைதூக்குவள்.

பணிவு.

8. அதோ இருக்கும் தேவியைப் பார்! அவளுடைய அமைதியென்ன? அவளது பெருந் தன்மை யென்ன? மகலட்சுமி போன்ற முகத்தையுடையவளாய் டாம்பீக உடையின்றியிருக்கிறாள். முகத்தில் புன்சிரிப்பும், பேச்சில் அடக்கமும, பார்வையில் இரக்கமுமுள்ள இத்தேவியை சிறுவர்களும் பெரியவர்களும் மதித்துக் கொண்டாடுகிறார்கள். அவளது நற்குணங்களை யெல்லோரும புகழ்ந்து பேசிக்கொள்கிறார்கள்.

9. பிறர் பேசும்போது அவள் அங்கு நிற்பதில்லை. வாய்பதட்டமுள்ளவர்களோடும் வீண்பேச்சு பேசுபவர்களோடும், அசட்டுத் தைரியமுள்ளவர்களோடும் அவள் பேசுவதில்லை. பிறருடன் பேசும்போது வார்த்தைகளை அளந்து, தான் சொல்லுபவைகளுக்குப் பிறர் இன்ன அருத்தம் கொள்வரென்று நினைத்துப் பேசத்தொடங்குகிறாள்.

10. அவள் புருஷர்கள் நடமாடும் கூட்டங்களுக்குப்போவதில்லை. அவள் தன் வீட்டில் செங்கோலாட்சி செலுத்துகிறாள். அவள் நீதியாக ஆட்சி புரியும்போது எல்லோரும் அவளுக்குக் கீழ்படிந்து நடக்கிறார்கள். அவளது வீடு ரிஷி ஆசிரமம்போன்ற சாந்திமயமாயிருக்கிறது. அதிகாலையிலெழுந்து தன் வேலையைச் செய்யப்போகு முன்னர் அவள் மற்றவர்களுக்கும் அவரவர்கள் செய்யவேண்டிய வேலைகளைத் திட்டம் செய்கிறாள்.

11. அவளுக்குக் குடும்பப்பாதுகாப்பில் பூரண சந்தோஷம். குடும்ப தர்மங்களை அறிந்து அவைகளின்படி நடப்பதற்காகவே அவள் படிக்கிறாள். சிக்கனமும் ஒழுங்கும் அவள் வீட்டில் குடியிருக்கின்றன. திக்கற்றவர்களிடத்து அன்பும் இரக்கமும் அவள் வீட்டு வாசற்காவலாளிகளாகவிருக்கின்றன.

12. அவள் தன்னைப் பிறர் புகழும்போது காதுகொடுப்பதில்லை. அவள் தன் நன் நடத்தையினாலேயே பிறர் நடைகளை ஒழுங்குபடுத்துகிறாள். தன் குழந்தைகளுக்குச் சதா ஸன்மார்க்கத்தைப் போதிக்கிறாள்.

13. அன்பினாலும் மரியாதையினாலும் அவள் பந்துக்களை வரவேற்கிறாள். முகம் சுளிக்காமல் அவர்களை உபசரித்து வழியனுப்புகிறாள். அவள், பிறர் ஏளனம் செய்வதற்கும், கணவன் அதிருப்திக்கும் ஒரு பொழுதும் ஆளாவதில்லை.

14. வாழ்வு வந்தபோது, அவள் பொங்கி தலைவிரித்தாடுவதில்லை. தாழ்வு வந்தகாலத்திலும் அவள் சரித்திர நிலையைக் கவனித்து மனச்சோர்வடைவதுமில்லை. அவள் தன் கணவனது கஷ்டங்களை மென்மையான பேச்சுக்களால் போக்குகிறாள்.

அவ

னுடைய பாராட்டுக்களால் அவன் அக்கஷ்டங்களினின்றும் ஆறுதலை யடைகிறான். அவளை மனைவியாகக் கொண்டவனே புண்ய புருஷன்; அவளைத் தாயாகப் பெற்ற குழந்தைகளே பாக்கிய சாலிகள்.

15. அவளது நல்ல நடத்தைகளைப் பிற ஸ்திரிகள் பார்த்துப் பழக்கிக்கொள்கிறார்கள். பெரியோர்களெல்லோரும் அவளைத் தருமசீலியென்றும், குணசீலியென்றும் புகழ்ந்து ஆசீர்வதிக்கிறார்கள். கடவுளுடைய அநுக்கிரகம் அவளிடத்தில் பரிபூர்ணமாயிருக்கிறது.

எதிரொலிகள்.

உன்னைப்பற்றி உலகம் என்ன நினைக்கிறது? அல்லது என்ன சொல்கிறது என்று ஏன் கவலைப்படுகிறாய்? ஏனென்றால் உலகமானது சரியாக நிதானிக்கும் நியாயாதிபதி அல்ல; உன் மனச்சாட்சியே உலகத்தைப் பார்க்கிலும் பெரியதும் உண்மையுள்ளதும் சரியானதுமான நியாயாதிபதியாகும்.—E. W. மேக்கவேன்.

*　　*　　*　　*

உத்தம குலத்தில் பிறந்தவர்கள் எப்போதும் உண்மை பேசுகிறவர்களாகவேயிருக்கவேண்டும்:—
யூரிப்பைடிஸ்.

*　　*　　*　　*

துர் அதிர்ஷ்டமுள்ளவர்கள் பயப்படுகிறது சரியல்ல; அவர்கள் எப்போதும் நல்ல காலத்தை எதிர் பார்க்கவேண்டும்.—அப்பலோடோரஸ்.

*　　*　　*　　*

எளியோர்களை வலியோர்கள் ஆளுவது இயற்கைச் சட்டமாகவிருக்கிறது. இது ஒரு காலத்திலும் மாறாது.—டைஒனிஷியஸ்.

*　　*　　*　　*

அருமைக் குழந்தைகளே! தூக்கம் உங்களை ஜெயிப்பதற்கு இடம் கொடாதீர்கள். ஏனெனில் சத்துருக்கள் உங்களைப் பரிகாசம் செய்வார்கள்:— ஹோமர்.

*　　*　　*　　*

பெண்டிர்கழகேஅழகு; புருஷர்களுக்கு உறுதியே உறுதி:—பயான்

*　　*　　*　　*

மனிதன் மனிதனிடம் தன் மனத்தை மறைத்து வாழலாம். கடவுள் முன்னிலையில் அவன் மனம் உள்ளதுள்ளபடியே தோற்றுகிறது.—அன்டோனியஸ்.

*　　*　　*　　*

நமது வாழ்க்கை சதுரங்க ஆட்டம் போன்றது. ஒரு ஆட்டத்துக்கும் மற்றொன்றுக்கும் வேறுபாடுகளிருப்பதுபோல் நம்மிருத்தியங்களில் வேறுபாடுகளிருக்கவேண்டுகின்றன:—கிலேக்லிஸ்.

கிரயமில்லாமல் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மஹானின் மூலிகையும், தாயத்தும் கிடைக்கும்.

சகோதரர்களே! சகோதரிகளே!!

உலக பிரசித்தி பெற்ற அருமையான மூலிகையும், மகிமையுள்ள தாயத்தும் மகத்வமுள்ள மஹானால் எனக்கு கிடைத்து அதனால் உலகிலுள்ள அநேக ஜனங்கள் தீராதென்றெண்ணியதும், நாள் பட்டதுமான குஷ்டம், க்ஷயம், மூலம் முதல் சகலவிதமான வியாதிகளும் பலவிதமான கஷ்டங்களும் கவலைகளும் நீங்கி சகல சவுக்கியத்துடனிருப்பவர்களையும்.

நீண்ட நாளாக புத்திர பாக்கிய மில்லாதவர்களும், கர்ப்பம் உண்டாகி உண்டாகி வீணனவர்களும், அவரவர்கள் மனம்போல் குழந்தை உண்டாகி சந்தோஷத்துடனிருப்பவர்களையும் இப்போதே இந்த நிமிஷமே நேரில் பார்க்கலாம்.

நற்சாக்ஷி கடிதங்களாலும் காணலாம். பிரபலமான பேப்பர்களிலெல்லாம் அடிக்கடி ஆச்சரியமாகும்படியான சந்தோஷ சங்கதிகளை பார்த்திருப்பீர்கள்.

கலியுகத்தில் மஹானின் மகிமை விளங்குகிறது. நாளுக்கு நாள் தூண்டாமணி தீபச் செய்து வருகிறது.

எந்த மதஸ்தர்களும் உபயோகிக்கத் தக்க மூலிகையும், தாயத்தும் அமைந்திருக்கிறது. 3 நாள் மூலிகையின் கிரயம் ரூ. 2—0—0 விகிதம் வியாதிகளுக்கு தக்கபடி எத்தனை நாள் மூலிகை தேவையாகுமோ அதுபோல் கூடும் தொகைக்கு வி. பி. பி,—யில் அனுப்பி வருகிறோமென்பதும் தாயத்து 1க்கு ரூ. 2 விகிதம் கொடுத்து வருகிறோமென்பதும் ஏழை ஜனங்களுக்கு கிரயமில்லாமல் கொடுத்துவருவதோடு சாப்பாடும் போட்டு செலவுக்கும் உதவி வருகிறோமென்பதும் ஏற்கெனவே தெரிந்த விஷயம்.

ஏழை முதல் பிரபுக்கள் வரை பொது ஜன நன்மைக்காக தற்காலம் சகல ஜனங்களும் சந்தோஷத்தை யடையவும், பொது ஜனங்களுக்கு நன்மை உண்டாகவும் ஒவ்வொரு குடும்பத்தார்களும் இதற்குப் போஷகராக வேண்டுமென்று கருதி இருப்பதால்

நாளது ஜூலைமீ 31-ந் தேதிக்குள் ஒவ்வொரு குடும்பத்தார்களும் அடியிற் கண்ட விலாசத்திற்கு மூன்று ரூபா மணியார்டர் செய்தனுப்பி தங்கள் பெயரை நமது ரிஜிஸ்டரில் தாக்கல் செய்து கொண்டு ஒவ்வொரு மாதமும் 10 தேதிக்குள் ரூ மூன்று விகிதமே 12 மாதங்களுக்கு மாத்திரம் மணியார்டர் மூலமாக தவறாமல் அனுப்பி வர வேண்டியது.

12 மாதங்களுக்கு மேல் அனுப்பவேண்டியதில்லை. இவ்விதம் அனுப்புவோருக்கும் அவர்கள் குடும்பத்தோர்களுக்கும் எந்தவிதமான வியாதிகள் இருந்தாலும் இனி ஏற்பட்டாலும் எந்த சமயத்தில் எழுதினாலும் நாம் உடனுக்குடனே அதற்கு வேண்டிய மூலிகையோ தாயத்தோ அவைகளை வேண்டியதுபோல் உடனே அனுப்பி வைப்போம்.

மஹானுடைய கிருபையால் உடனே குணமாகும். இந்தப்பட்டி ஜீவியகாலம் வரை வேண்டியதை குடும்பம் பூராவுக்கும் கொடுத்து வரக்கூடும்.

இந்த மாதம் ரூபா மூன்றும் வந்ததும் அப்போதே போஷகராக ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொண்டு ஒவ்வொருவருக்கும் தேவையானதை அது முதற்கொண்டே அனுப்பக்கூடும்.

எந்த விதமான வியாதியுள்ளவர்களானாலும், பலவித கஷ்டங்கள் உள்ளவர்களானாலும் எதற்காக தேவை யிருந்தபோதிலும் அது விவரங்களை ஆரம்பமுதல் சரிவர விவரமாக எழுதி நாம் கொடுக்கும் ஜீவிய கால ரிஜிஸ்டர் மெம்பரை குறிப்பிட்டு ஒவ்வொரு கடிதங்களிலும் தங்கள் விலாசங்களை தெளிவாக தெரிவித்து வர வேண்டியது.

ஒவ்வொரு போஷகர்களுக்கும் இவ்வருஷம் நாம் அச்சிட்டிருக்கிற வியாதிகளின் விவரம், குறிப்பு, முக்கிய குறிப்பு, புதிய நற்சாக்ஷிகள் முதல் சகல விவரமும் கண்ட "பால சந்திரன் காலண்டர்" என்னும் புக்கும் 2 கலரில் 3 வருஷத்தியகாலண்டரும் அனுப்பி வைப்பதுடன்.

புதிதாக ஒவ்வொரு வருஷமும் அச்சிடும் புக்கும் காலண்டரும் இடையில் அப்போதைக்கப்போது அச்சிடும் துண்டு நோட்டீசுகளும் 'பாலசந்திரன்' அனுபந்தங்களும் அப்போதைக் கப்போது அனுப்பி வைக்கக்கூடும்.

ஒவ்வொருவரும் போஷகராக முன் வருவதோடு கூட தங்கள் சிநேகிதர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் இதன் நன்மைகளை விவரமாகச் சொல்லி தங்களால் இயன்ற வரையில் போஷகராக இதில் சேர்த்துவைத்து பொதுஜன உபகாரத்தைச் செய்வதே பெருத்த நன்மையாகும்.

வேண்டியவர்கள் நாளது ஜூலைமீ க்குள் அடியிற்கண்ட விலாசத்திற்கு ரூ. 3 அனுப்பி தங்கள் பெயர்களை ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொள்ளலாம்.

எஸ். ஏ. கே. பிள்ளை,

மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா

---

10 வருஷத்திற்கு பின் ஆண் குழந்தை ஜனனம்
சென்ற வாரம் கனம் குன்னூர் தாசீல்தாரவர்களால் கிடைத்த கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ எஸ். ஏ. கே. பிள்ளை அவர்களுக்கு,
மெர்ச்சண்ட் அண்ட் கன்ராக்டர், மேட்டுப்பாளையம்

ம-ா-ா-ஸ்ரீ மேட்டுப்பாளையம் எஸ். ஏ. கந்தசாமி பிள்ளை அவர்களுக்கு அன்புடன் எழுதிக்கொள்வது, எனது பெண்குழந்தைக்கு சுமார் 10 வயதாகிறதென்றும் அதற்குப் பின் குழந்தை பிறக்கவில்லை என்றும், நான் தங்களிடம் சொல்லிக் கொண்டதில் எனக்கு தாங்கள் தங்களுக்கு மஹானால் கிடைத்திருக்கிற மூலிகையும் கொடுத்து உபயோகிக்கும் விவரமும் சொல்லி ஆண் குழந்தையே பிறக்குமென்றும் சொல்லியிருந்தீர்கள். அது போலவே நாம் உபயோகித்து வந்தோம். மஹானின் கிருபையால் இன்றைய தினம் விடியற்காலம் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. இச்சங்கதியை எனது மனபூர்வமான சந்தோஷத்துடன் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள
(Sd.) K. LAKSHMANAIAR,
தாசில்தார், குன்னூர்.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.